தாய் தந்த செல்வம்

முதலிய கட்டுரைகள்

முதல் தொகுப்பு



திருப்புகழ்மணி

ஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி அய்யர்

குங்குமம் காரியாலயம்

மதராஸ் 10

அல்பான்ஸோ டாடே

எழுதிய சிறு கதைகள்

(பிரஞ்சு மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்
ஸ்ரீமதி எஸ். விசாலாக்ஷி)

★

கிடைக்குமிடம் :

"குங்குமம்" காரியாலயம்

மதராஸ் 10

தாய் தந்த செல்வம்

முதலிய கட்டுரைகள்

முதல் தொகுப்பு

திருப்புகழ்மணி

ஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி அய்யர்



குங்குமம் காரியாலயம்

மதராஸ் 10

குங்குமம் வெளியீடு - 1

விலை ரூபாய் ஒன்று

ராமநாத் பிரஸ், சென்னை 14

முன்னுரை

தமிழ் நாட்டில் சென்ற பத்து வருஷமாக ஒரு புது உணர்ச்சியை (கிளர்ச்சியை அல்ல) பார்க்கிறோம். திருவேங்கடத்திலிருந்து குமரிமுனை இறுதியாக முருகப் பெருமானிடத்தில் ஒரு அபூர்வமான பக்திப் பரவசம் மக்களிடை உண்டாயிருப்பதைப் பார்க்கிறோம்.

2

முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள கோயில்கள் விளக்கம் பெற்று வருகின்றன. நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பக்தர் கூடுவதையும், வழி பாடுகள் நடத்துவதையும் காணலாம்.

3

"முருகன் சங்கங்கள்" என்றும், "திருப்புகழ்ச் சங்கங்கள்" என்றும் நூற்றுக்கணக்கான சங்கங்கள் உண்டாகி இருக்கின்றன. பக்தர்கள் கூடித் திருப்புகழ் பாடுகிறார்கள். ஆனந்தம் அடைகிறார்கள்.

4

எல்லாவற்றையும்விட தமிழ் நாட்டின் சரித்திரத் திற்குள் புகுந்து ஒளிவிட வேண்டிய காரியம் ஒன்று:

சென்னையில் எல்லோருக்கும் தெரிந்த பூக்கடைக் குப் பின்னால், உள்ளாக, மல்லீஸ்வரர் கோயில் என்று ஒன்று இருக்கிறது.

கோயிலின் வடக்குப் பிராகாரமும் கீழப் பிராகார மான முகப்பும் பதினாயிரம் பேர் உட்காரக்கூடிய வசதி யான விஸ்தாரமான இடம்.

ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை எட்டு மணிக் குப் பதினாயிரம் பேர் கூடுகிறார்கள். பெண்கள் மூவா

யிரம் என்றும், ஆடவர் ஏழாயிரம் என்றும் கணக்குச் சொல்லவேண்டும்.

வடக்கே தண்டையார்ப்பேட்டை, தெற்கே சைதாப்பேட்டை, மேற்கே கீழ்ப்பாக்கம் இந்த எல்லேக் குட்பட்டவர்களாய் பதிஞயிரம் பேர் காலேயில் எட்டு மணிக்குக் கூடுகிருர்கள். மழைகாலமாளுலும் சரி, பனிக்காலமாளுலும் சரி, கூடிவிடுகிருர்கள். ஒரே மன நிலேயோடு கூடுகிருர்கள்.

திருப்புகழ் மணியின் பக்திப் பரவசமான பாடல் களில் ஈடுபட்டவர்களாய் பாடல்களோடும் முருகப் பெருமானேடும் ஐக்கியமானவர்களாய் பக்தி நிலேயை அடைகிருர்கள்.

பாடல்களேத் திருப்புகழ் மணி பாடும் போது அத்தனே பேரும் கலந்து கொண்டு பாடுகிருர்கள். அப் படிப் பாடுவது வார்த்தைகளோடு மாத்திரம் நிற்கிற தல்ல. ராகங்களோடும் கலந்து கொள்ளுகிருர்கள்.

திருப்புகழ் மணி சங்கராபரணத்தில் பாடிளுல் அத்தனே பேரும் சங்கராபரணத்தில் பாடுவார்கள் அப்படியே தோடி என்ன, காம்போதி என்ன, கல்யாணி என்ன, ஆரபி என்ன, இப்படி அந்தந்த ராகங்களோடு களே விளங்கும்படி பாடுகிருர்கள். இது ஒரு அதிசயந் தான்.

காரணம்: திருப்புகழ் மணியின் பாடல்களெல் லாம் இதயத்திலுள்ள பக்தி வேகத்தில் வருவதுதான். அந்த வேகம் கேட்பவரையெல்லாம் மெள்ள மெள்ள வசப்படுத்தி விடுகிறது. சங்கீதமே கைவந்து விடு கிறது.

மேலே குறிப்பிட்ட அத்தனே விஷயங்களேயும் சாதிப்பது எது? திருப்புகழ் மணியின் இதய பூர்வ மான பக்தி ஆவேசந்தான்.

இறைவன் வேண்டுவது பக்தி (அன்பு) ஒன்று தான். வேறு ஒரு பொருளும் அல்ல. அந்த பக்தியைத் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் வாரந்தோறும் எல்லாம் வல்ல இறைவனுக்கு வழங்குகிறார்கள். இறைவனும் ஆனந்தமாயப் பெற்றுக் கொள்ளுகிறான்.

"அன்பலால் பொருளுமில்லை
ஐயன் ஐயாறனுற்கே"

5

மல்லீஸ்வரர் கோயில் பிராகாரங்களில் திருப்புகழ் மணியின் பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகிறதை கண்ணாரப் பார்க்கிறோம். நம்மையும் இழுத்துக் கொண்டு செல்லுகிற பிரவாகம் அது.

சில வேளைகளில் அந்த பக்தி, 'குங்குமம்' 'அம்ருத வசனி' முதலிய பத்திரிகைகளில் கட்டுரைகளாகப் பொங்கிவருவதைப் பார்க்கிறோம். எப்படியெல்லாமோ பொங்குகிறது, மகுடிக்கிறது, சுழல்கிறது.

பக்தியின் இந்த விசித்திரமான கொந்தளிப்பை இந்த புஸ்தகத்தில் (குங்குமம், அம்ருதவசனி கட்டுரைகளில்) பார்க்கிறோம்.

சொல்லுக்கு அடிப்படையாய் உள்ள பக்தியைப் பார்த்து அனுபவித்து பயனடைவோமாக.

திருக்குற்றாலம்
11-8-50

டி. கே. சிதம்பரநாத முதலியார்

பொருளடக்கம்



ஸ்ரீ திருப்புகழ் மணி

எக்காலக்கண்ணி

தாங்காமல் தாங்கி என்னை
தந்ததெல்லாம் யான் மறவேன்
பாய்ந்து வரும் ஊழ்வினைகள்
ஓய்ந்திடுவ தெக்காலம் !

தாங்காமல் தாங்கி உன்னை
ஏங்கி நிற்கும் என் மனத்துள்
பாங்காய் பரிந்து வந்து
பண் புறுவதெக்காலம் ?

முருக னெனவே உருகி நின்றேன்
வருக எனவே கூவிக் கனிந்தேன்
அருகில் வந்து அன்புருவாய்
ஆளுவதும் எக்காலம் ?

தூங்காமற் தூங்கி சுத்த
தூய்மை வெளி தனில் கலந்து
ஓங்கார உள்ளொளிக்குள்
ஓங்குவதும் எக்காலம் ?

காணாமற் கண்டு உன்னை
கண்மணியே என்று வாழ்த்தி
கூடாத காட்சி தனில்
கூட்டுவதும் எக்காலம் ?

நினையாமல் நினைந்து உன்னை
நினைவதனில் நாட்டி வைத்து
மனமாயை மாய்ந்திடவே
புனைவதும் நான் எக்காலம் ?

முத்தமிழ் விநோதம்

முழு முதலாய் நின்று ஓங்கார உள்ளொளிக்குள்ளே
இனிக்க வரு பேரோசைப் பேறே!
ஏழேழுலகம் தானேயாகி எங்கும் பரந்து நின்று
மேலோர் நாவிலுரை கற்பகக் கனியே!
எழும் பல நாம ரூபமும் தாமே யாகி மூர்த்திகள் திளைக்கும்
இன்னமுத ஆதாரப் பொருளே!
பழுத்த உளம் படைத்த பெரு மக்கட்கோர் செல்வமே
மறைகளும் முனிவரும் போற்றும் முத்தமிழே!

உண்ணா முலையாள் உளத்தெழுந்த சிவஞானக் கொழுந்தே!
கருணை வெள்ள பேரின்ப அமுதே
பண்ணார் பசுங் குழவிக்கு பொற் கிண்ணத்தமர்ந்து
கவிராஜ பிருது தந்த செல்வமே!
எண்ணா வரம் தந்து ஏனையோரை வாழ்விக்க
தென்னந் துறையான் வாசகத்தமர்ந்த வாழ்வே!
பொன்னார் பொலிவுடன் நாவரசும் வன்தொண்டரும்
பயின்ற பாக்களில் உரையும் முத்தமிழே!

கார் கொண்ட ஓர் உருவம் கொண்டதென்ன!
ஆய்ச்சியர் வெண்ணெய் உண்ட குழலொளியே!
பார் வெருவ நின்ற போர் முனையில் பார்த்தனுக்கு
அச்சமற உபதேசித்த மாபெரும் மொழியே!
நேர் கொண்ட தவத்தான் வேற்றுமை அகற்றி
எங்கணும் காணும் குருகூரன் ஜோதி பெரும் துணியே!
யார் யார் எங்கே கண்டார் ஆங்கே இருந்து இடர் களைந்து
விநோத வாக்களிக்கும் அரும் பெரும் முத்தமிழே!

பரமசிவம் மனங்குளிர செவி மணக்க உலகமேத்த
முருகன் கனிவாயிற்றவழ்ந்த களிப்பே!
மரமென்ற ரற்றி பரமே அடைந்த வான்மீகியர்
கம்பராதிகள் வாக்கினில் பெருகும் வெள்ளமே!
திறமொடு சங்கத் தலைமை வகித்து நக்கீரருக்கும்
நலனளித்து நற்றமிழ் பெற்ற நாயகமே!
வரமும் கொடுத்து வினையும் கெடுக்கும்
நற்றிருப்புகழாய் விளங்கும் முருக முத்தமிழே!

திருத்தணி

செம்மை மனத்துள் உலகம் செழிக்க வாழ்த்தும் நல்ல உள்ளம் தேக்கிய செங்கழுநீர் சுனையாம். செங் கழுநீர் புஷ்ப தாதுக்களால் மூடப்பட்ட தேனையுண்டு தங்கள் உருவமே வேறாக மாறி செவ்வழிப் பண்ணில் திருப்புகழ் பாக்கள் பாடும் வண்டுகள் நிறைந்த சோலையாம். அன்பும், ஆர்வமும் வெள்ளமெடுத்து அருவிகளாய் அடியார்கள் கண்களில் வற்றாது ஓடும் குளிர்ந்த அருவிகள் சூழப்பெற்றதாம். இன்பம் துன் பம் கொழித்தோடும் பேரின்ப ஓட்டமாம். ஆனந்தத் தைத் தேக்கித்தேக்கி ஆங்காங்கே மூழ்கி மூழ்கி களிக்கும் தபோதனர்கள் உறைவிடமாம் துறைகள் பலபல.

தன் பசுமையில் ஊறிய பால்கொண்டு உலகை வளர்த்திடும் பச்சை பசுங்கிளியாம் மாசாம்பவி பயி ரிட்டு வளர்த்த சிவபோகத்தின் பசும் தினைகள் எங்கும் ஏக உருவாய் விரிந்த லோகம். பூரணம் போல் சுவைத்து, கலந்து, நிறைந்த மாபெரும் மலையொன்று நடுவே தாங்கப் பெற்றது. சாரலில் படிப்படியாய் சமைத்திட்ட பல மாளிகை போல அகலமும், நீளமும் தானே கொண்டு யாரேனும் தன்னையடைந்தால் அவர் களை யெலாம் ஆட்கொள்ள வல்லதாகி நிருமித்த திருப் புகழ் அடிகள் போலவும் ஆபரணங்கள் ஒளிரப்பெற் றது. மலையடிவாரத்தில் சரவணப் பொய்கை யெனும் கடலால் அணையப் பெற்றது. வெந்த மனமும், பதைத்த உள்ளமும், மாய்ந்த உயிரும், தளர்ந்த உணர் வும், தகைமையழிந்த பண்பும் தண்மை பெற்று, ஆற்றல் ஊறி, உயிர்த்து எழுந்து தணிகையுடன் வாழப்பெறும் சூழ்நிலை தாங்கியது. பேதமெனும்

பூதம் நீங்கி, நின்ற இடத்திலே வானங்காட்டி, மோகம் காட்டி, ஆசை விரட்டி, தெய்வநேர்மை யூட்டி, காலம் போக்கி, உலகெலாம் ஒன்ருய் நிறுவி பேரானந்த பெரு நிலையில் வீற்றிருக்கும் நெறிகாட்டி, தொண்டர்களின் ஆனந்தத் திரள்கூட்டி, பெறுதற்கரிய பெரும் படிகாட்டி, பலகாலும் அவனைத் தொழுவோர்கள், மறவாமல் திருப்புகழ் கூறி படிமீது துதித்துடன் வாழ அருள் சேய் உறையும் திருத்தணிகையெனும் லோகம். காண்போர்க்கு விண்ணுலகம் பொற்பூவும் வாசனைபோல். காணுர்க்குக் கல்லுலகம் கற்பூவும் வாசனை போல். இம்மாபெரும் தலத்தில் வளர் தணிகேசனைக் காணவே டிசெம்பர் 31ம் தேதி யன்று திரள் திரளாகக் கூடுகிறுர்கள் பக்தர்கள்.

முருகன் என் தோழன்

தாழாமையாலன்ருே தலைபாரம் பெற்றேன்
தொழாமையாலன்ருே தொல்நோயு முற்றேன்
பாழாழியில் வீழ்ந்து பெருந்தொல்லை செற்றேன்
தோழா! என்றுனைப்பாட பெரு வாழ்வு பெற்றேன்.
[“பாதமலர் மீது போதமலர் தூவி பாடுமவர் தோழப் பெருமாளே!”]

என்பது திருப்புகழ்!

தோழன் வண்ணம்

குற்றம் பாரான் குணம் பாரான்
உற்றதோர் பெரு மிடியும் பாரான்
பெற்ற பேர் இகழ்ச்சியும் நோக்கான்
சுற்றமும் மதித்திடான் யான் பெற்ற தோழன்!
தீந்தமிழ் பாடற்கு அருஞ்சுவையாம் தோழன்
“பூந்தமிழ்ச் சோலையிலே பயிலும் குயிலினத்தான்”
காந்தமென வண்ணத்தான் கவலை யொழியெண்ணத்தான்
எந்திய கரத்திலெமை காத்தளிக்கும் தாயனையான்!

என்ன பயன் ?

பயனை நாடியல்லவோ மக்கள் செயல் நிற்கின்றது! அரும்பெரும் செயல்களுக்கு அன்றோ பயிற்சியை வளர்ப்பது. பயிற்சியின் திறத்திலலன்றோ உயர்வும், தாழ்வும் காணப்படுகின்றன. புகழ்ச்சியும், இகழ்ச்சியும் செயல்களின் பண்பை நாடி உலகம் பகிர்ந்து அளிக்கின்றது. பயனை நாடியே பயிற்சியை வளர்க்க வேண்டும். என்றென்றைக்கும் அழிவிலாது நின்று பேரின்பத்தைக் கொடுக்கக் கூடியவை யாவை? அவைகளை எப்படி பெறலாம் என்ற கேள்வி பிறக்கின்றது. இந்தக் கேள்வியை கேட்டவர்க்கு முன்னமேயே உள்ளதை உள்ளவாறு கண்டுபேசத் திறம் படைத்த பெரியோர்கள் பதில் கூறியுள்ளார்கள்.

காயம் கொண்டு என்ன பயன்? அன்பாய்க் கரைந்தாலன்றி கயந்திடுமே! நாவு கொண்டு என்ன பயன்? திருநாமம் சுவைத்தாலன்றி நலிவுகள் மலிந்திடுமே! பொருள்கொண்டு என்ன பயன்? பொருளீந்து அருள் பெற்றாலன்றி இருள் வினைகள் சூழ்ந்திடுமே! அறிவு கொண்டு என்ன பயன்? அறிவை அறிவால் அறிந்தாலன்றி அறிவெல்லாம் அவலமாய் முடிந்திடுமே? பிறவி கொண்டு என்ன பயன்? பிறப்பு அற்றாலல்லவோ பிறந்த பயன்! கற்றால் என்ன பயன் ? கணக்கு அற்றாலன்றோ கற்ற பயன்! சுற்றமொடு கூடிக் குலாவி கண்டது என்ன பயன்? சீற்றமும் சினமும் அற்றால் அன்றோ சீர்கொண்ட பயன்!

மாந்தர் கூட்டத்தை நாடாதே மனமே! மாய்பவர் மாந்தர். மாய்ந்தவர் கூட்டத்தில் கூடிவிட்டால்? இவ்வண்ணம் இருவாதனையற்று இறந்தவன் பெருமையை யாரே புகழவல்லார் என்பர் பட்டினத்தார். மாய்ந்த

வர், அவமாகிய உலகத்தை மாய்த்து தவத்தில் ஆழ்ந்த வர். மாந்தர்கள் உலகத்தையே நிலையெனக் குறி கொண்டு அவத்தில் வீழ்ந்தவர். 'தனை ஆய்ந்திருப்பது தத்துவம்' என்றல்லவோ நமது பண்டைப் பாட்டியார் பாடியுள்ளதும்! உள்ளத்தில் உறைந்திடும் ஈசன்பால் மனம் மோனத்தே, தியானத்தே நிலை நிற்க பயிற்சியும், முயற்சியும் வேண்டும். இந்த நிலை வானுலகம்.

காயம் உறைவது மண்ணுலகம். காயத்தை வளர்த்து பெறும் பயன் யாதோ? "ஊனலாதது ஒன்றுமில்லை ஊனுமில்லை ஊனிடில்" என்பது சித்தர்கள் உபதேசம். ஊன் பெற்ற காயம் சேவையாக உருகல் வேண்டும். சேவை காயத்திற்கு ஏற்பட்ட கதி. மோனமும், தியானமும் ஜீவனுக்கும் மனம் பெற்ற மானிடனுக்கும் ஏற்பட்ட கதி. நற்கதியின் விஸ்தாரத்தை நன்கே விமர்சனம் செய்துள்ளார் நம் பெருமக்கள்.

அடியார் உறவும் அரன் பூஜை நேசமும் அன்பும் அன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ ? பங்கயன் வகுத்த
குடியான சுற்றமும் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே

என்பர் பட்டினத்தார். மூன்று பொருள்கள் அழிவற்றன. அவைகளைப் பெற வேண்டுமென்றார். எவையென்றால் (1) அடியார் உறவு. (2) அரன் பூஜை நேசம். (3) அன்பு.

வள்ளலார் வேண்டுவதைக் கவனிக்க வேண்டும்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று
பேசுவார் உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்

பெருநெறி பிடித் தொழுகவேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்
உனை யென்றும் மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வினுல் வாழவேண்டும்.........

மண்ணுலகும், விண்ணுலகும் ஒன்றுக்கொன்று அணிகலமாய் இருக்கும் இயல்பை யுணர்ந்து இவ்விரு உலகிற்கும் அமைப்பான 'நடுவான' கர்மங்களால் வாழ் நாட்களைப் பரப்ப வேண்டும். இது ஞானிகளின் இயல்பு என்றார் பாரதியார்,

இந்தக்குறிகளெல்லாம் இகபர சௌபாக்யத்திற்கு சாதகமாய் இருப்பதை சித்தர்கள் போதிக்கின்றார்கள்.

எல்லா உலகிலும் அமைந்துள்ளான் ஈசன். அமைந் துள்ளதும் இயல்பாகவே அமைந்துள்ளான். இயல் புக்கு ஒவ்வாத அற்புதங்களை ஆங்காங்கே தோற்றுவிக் கின்றான். ஆயினும் இந்த அற்புதங்களும், அதன் சக்திப் பிரகாசமும் அவன் இயல்பே. "இயல்பிலே நாடுங்கள் ஈசனை" என்ற மேலான உபதேசத்தைச் செய் கின்றனர். இயல்பிலே, அமைதியிலே, சாந்தத்திலே, சிருஷ்டியின் விளையாட்டிலே குறிகொண்ட மேன்மக் கள் வேண்டுவதும் மேலே கண்ட மேலான குறிகளா கும். இக்குறிகளின் மகிமைகளை ஆராய்ந்து உணர்ந் தாலன்றி அவைகளின் அனுபூதி தேறுவது அரிது. இக்குறிகள் எவ்விதம்தான் விளங்குவது என்பதையும் பார்க்கவேண்டும், முயற்சிக்கத் தகும்!

கண்ணாடி

கல்லார் மனத்துடனில்லா மனத்தவ
கண்ணாடியிற் றடங்கண்ட வேலா

என்று ஸ்ரீ அருணகிரி திருப்புகழில் பாடிவிட்டார். உலகின்கண் எத்தனையோ கண்ணாடிகள் இருக்க, ஒரு கண்ணாடியை முருகன் தான் வீற்றிருக்கும் தடமாகக் கொண்டானும். தவமெனும் கண்ணாடியாம். வாங்கு மிடம் மனத்துள் இருக்கின்றதாம். முருகன் நாமத்தை உரைக்காத, கல்லாத மனத்துடன் காணப்படமாட்டாது மனத்தவக் கண்ணாடி.

சாதாரணமாய் கண்ணாடிக்கு நிறம் கிடையாது. உருவம் கிடையாது. நன்று தீது கிடையாது. அகலம் நீளம் கிடையாது. தான் நான் எனும் தன்மையும் கிடையாது, இரவு பகல் கிடையாது. உலகத்தைத் தன்னிடத்தில் அடக்கிக்கொள்ளும் சக்தியுண்டு. எதைக் காட்டினாலும் அவற்றின் பிரதிபிம்பத்தைக் கண்ணாடிக்குள் பார்க்கலாம். சமத்வத்தின் ஓர் ஒளி. கண்ணாடியின் மேல் நிலையைப் பார்த்தால் ஓர் அப்பு அழுக்கு இல்லாத சமம்தான். கீழ்நிலையைப் பார்த்தால கீழிருக்கும் வஸ்துக்கள் காணாதவண்ணம் தடுக்கப் பட்டிருக்கின்றது.

எது தடுப்பது என்றும் தெரியாதபடித்தான் அமைக்கப் பட்டிருக்கின்றது. இப்படி தூய்மையின் பான்மையாய், மேல் கீழ் அற்று சமத்வமான ஒரு வெளிதான் கண்ணாடி எனப்படுகின்றது. தபோதனர்களின் மனோநிலையை அறிய வேண்டுமானால் கண்ணாடியைத் தவிர வேறு உபமானம் இருக்கிறதாகத் தெரியவில்லை. கண்ணாடியின் மேலே ஒரு உருவத்தை

ஒட்டிவிட்டாலோ அந்த உருவமிருக்கும் இடத்தில் வேறு ரூபங்களின் பிரதிபிம்பம் காணமுடியாது. கண்ணுடி தனக்கு ரூபமில்லாமல் செய்துகொண்டதின் பலன் உலக முழுதும் தன்னகத்துள் பிரதிபிம்பிக்கச் செய்யும் ஓர் ஆற்றலை அடைந்து விடுகின்றது. நான், எனது என்ற ரூப களங்கத்தை அறவே யொழித்தவர் களின் மனம் சுத்தப் பளிங்குபோல் பிரகாசிக்கின்றது. அந்தப் பளிங்கில் நடம் கொண்டவன் முருகன் என்றார் அருணகிரி.

நான், எனது என்ற பாவத்தைத் துறந்த யோகி களின் உள்ளம் ப்ரபஞ்சமே உறைகின்ற கோயிலாக வும், முருகன் எப்போதும் இருந்துவரும் க்ஷேத்திர மாகவும் ஆய்விடுகின்றது.

இப்படி பெரியோர்கள் மனத்தில், அதாவது ப்ரபஞ்சத்துக்கே ஓர் செல்வமாக வளரும் கண்ணுடி யில் முருகனை, தெய்வத்தைப் பார்ககலாம். ஜீவராசி களுக்குள் உயிருக்குயிராய் நின்று அருள்கின்ற தெய் வதத்தை உருப்படுத்திக் காண்பிக்க சாதாரணக் கண் ணுடிகளால் முடியாது. உருவத்தைக் காண்பிக்கும் ஜடப் பொருள்களால் ஏற்பட்டிருக்கும் கண்ணுடிகள் ஜடத்தின் உருவத்தை மாத்திரம்தான் காண்பிக்கும். உருவமாகிய அரங்கத்தில் ஆடுகின்ற உயிரையும், அவ்வுயிருக்குயிராய் நிற்கும் தெய்வத்தையும் காண் பிக்காது. இகபரத்தாசைக் கழிந்த யோகியர் உள்ளமோ உயிருக்குயிராய் நிற்கும் தெய்வத்தையே முன்னிறுத்தி விடும். இப் பெரியார்கள் சிறைவாசமாய் ஏற்பட்ட தேகத்தை உடைத்தெறிந்து வெளியிலே சஞ்சரிப்பவ ரேனும் அவர் கொண்ட தூய்மை உள்ளத்தைத் தங்கள் பாக்களிலே வைத்துவிட் டிருக்கிறார்கள். அப் பாக்களிலே பெருந்தகையர்களின் உள்ளக் கண்ணுடி யைப் பார்க்கலாம். அக் கண்ணுடியால் அவர் உள் ளத்தில் நிலைபெற்றுத் தாங்கும் தெய்வத்தையும்

பார்க்கலாம். இதை வற்புறுத்தி ஒரு அருமையான தேவாரத்தில் அப்பர் உபதேசிக்கின்றார்.

பூம்படி மக்கலம் பொற்படி மக்கல மென்றிவற்று
லாம்படி மக்கல மாகிலும் ஆரூ ரினிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டு வரேற்றமிழ் மாலைகளால்
நாம் படி மக்கலஞ் செய்து தொழுதுய் மடநெஞ்சமே

தமிழ் மாலைகளெனும் சப்த ப்ரபந்தங்களால் நாமே பாடி நமக்கே செய்துகொண்ட பளிங்குக் கண்ணாடியில்தான் ஆரூரன் ப்ரதிபிம்பம் விழும். அதைத்தான் நாம் பார்த்து உய்யவேண்டும் மட நெஞ்சமே! என்று உபதேசித்தார். நமது உள்ளம் அன்பால் தெய்வத்தை உருவாய்ப் பிடித்து நமக்குக் காட்டும் பளிங்காகுக! அதற்கு வேண்டித் தமிழ் மாலைகளால் பாடிப் பாடி, ஆடியாடி நமது உள்ளப் பளிங்குகளைத் தயாரித்துக் கொள்வோமாக என்றார் அப்பர்.

(அம்ருதவசனியிலிருந்து)

முருகஜோதி

கருணை நிலவொழுகும் வதனங்களாறும்
பன்னிரு மலர்க் கண்களும் அசைந்த
குண்டலங்கள் ப்ரபை தாங்கும்
குழையணிந்து திருப்புகழ் இன்னிசைக்கே
யென்றும் சாய்த்த செவிகளும் தொண்டரை
வா வா வென்றழைக்கும் புன்முருவலொளிர்
கனி யுகந்த செவ்வாயும்
பழி தாங்கும் வரைகளென புகழ் தேங்கிய
புயங்கள் மிசை புரண்டிலங்கும் தார் கடம்பும்
அபய மலர்க் கரங்கள் ஈராறும் உலகெலா
மளித்து பேரின்ப வீடென ஒளிர் நூபுர
நற்சரண யுகங்களும் கண்டனர்
மறையின் அந்தமும் மூவரின் மனோரதமும்
தொண்டரின் துணையுமாய் விண்டிலங்கும் பரஞ்சோதீ!

தாய் தந்த செல்வம்

தாயின் முகத்தைத் தியானித்தேன். புஜங்களை பஜித்தேன். சரணங்களை நமஸ்கரித்தேன். துதித்தேன். நாமத்தைப்பாடியே நின்றேன். தாய் பிரஸன்னமானுள். என்ன **பாக்கியம்!** என்னை வாழ்வித்து ஒரு பெருஞ் செல்வத்தை ஈன்ருள். ஈன்ற செல்வம் ஒரு கனி. அது யாது?

ஓங்காரம் எனும் வத்துவிலே ஒரு வித்து வந்து
பாங்காய் முளைத்த பயன் அறிந்தால் பதினுலுலகும்
நீங்காமல் நீங்கி நிறைவாய் நிறை யுருவாய்
ஆங்கார மானவர்க்கெட்டா **கனி**வந்து அமர்ந்திடுமே

என்பது சிவவாக்கியர் தேன்மொழி.

'அகம்,' 'அகங்காரம்' என்பது நான், தான் எனும் சொல்லிரண்டுமாகும். இவ்விரண்டு சொல்லிறந்தால் ஆங்காரம் தொலைந்துவிடும். ஆங்காரமற்ற சூழ்நிலையில் ஒரு கனி தானே வந்து அமர்ந்திடுமென்ருர். ஜகத்துக்கு எல்லாம் தாயாம் என்னம்மையார் கொடுத்தது இந்தக் கனிதான். பிறவிப் பயனை அறிய வைத்தாள். எங்கும் தானுய், பூரணமாய், வியாபித்து நின்று அன்பைக்காட்டி உணர்த்திஞள். கனியாகவும் என் உள்ளத்துள் அமர்ந்தாள். எட்டாத பேரின்பம் என்ற கனிதான் சிவகனி.

அக்கனி செக்கச் சிவந்து, பார்ப்பவர் கண்ணோடு, கருத்து, உணர்வு, உயிர் இவை எல்லாவற்றையும் இழுத்து தன் வசமாக்கி சுகந்தரும் தன்மையது. அன்பெனும் மரம் சேவையாய் தழைத்து நிழல்தர, அந்த

நிழலில் கனிந்த கனி. சூட்டிலும், வெப்பத்திலும் வெந்த கனியன்று. நாட்டிலும் நகரத்திலும், காட்டிலும் வீட்டிலும், உள்ளிலும் வெளியிலும், இயலிலும் இசையிலும், மண்ணிலும் விண்ணிலும், எங்குமாய் கனிந்து நிற்கும் கனி. காய் காய்க்கும் சோலையில் காணுதது. தேனும் புளித்து, கரும்பும் துவர்க்குந் தீஞ்சுவை ரஸமுடைத்து. மூப்பு, பிணி, பிறப்பு, எல்லாவற்றையும் விலக்கவல்ல கனி. என்பெலாம் தித்திக்கும் அதன் இன்பருசி. இக்கனியை யார்தான் வேண்டும் வேண்டுமென்று விரும்பாதிருப்பார். இதை எங்கே காணலாம் ? யார் கண்டார்கள் ? நமக்கும் கிடைக்குமா? கனியாசையில் உலகின்கண் கலகக் குழப்பம் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமே! இக்கனியை நினைத்தவுடனே பயம், குழப்பம், கலகம் அகன்று விடும். இந்தக் கனிக்கு ஆசைப்பட்டவர்கள் பலர். தேடினவர் பலர். அடைந்தவர் சிலர். மற்றவர்களும் அடைவார்கள். தேட்டம் முடிந்தால் ஈட்டமாகும் இந்தக் கனி.

கோபிகள் இந்தக் கனியை கண்ணன் அதரத்தில் கண்டு கண்ணீர் சொரிந்தார்கள்.

> **கனியிருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்**
> பனியரும்புதிருமாலோ என் செய்கேன் ஜகத்தீரே!

யோகிகளெல்லாம் இக்கனிக்கு ஆசைப்பட்டு காட்டில் சோலைக்குள் கடுந்தவம் புரிந்து நிற்க, எங்கும் கனிந்தொழுகும் கனியை ருசித்தார்களாம். வண்டுகள் போல ஹ்ரீங்காரம் எனும் மந்திரப் பூர்வமாய் ஜபம் செய்து, பூரித்து, அமிழ்ந்த இதயமலரின் மணமுண்டு, மதுவுண்டு பின்பு தோன்றிய கனியின் சுவையில் கலந்து தாமும் கனிகள் ஆயினராம். இது சிவவாக்கியர் சித்திரம்.

காயிலாத சோலையிற் கனியுகந்த வண்டுகாள் !
ஈயிலாத தேனையுண்டிராப்பகல் உறங்குறீர்
பாயிலாத கப்பலேறி யக்கரைப் படுமுனே
வாயினலுரைப்ப தெங்ஙண் உண்மை ஞான மோனமே

இக்கனியின் இன்பத்தை அறிந்தவர் அனுபூதிமுகமாக, சதா காலமும் இதை விழுங்கிக்கொண்டே இருப்பார்களாம்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணை மாகடலை,
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர்தம் மனமணி விளக்கை
செற்றவர்கள் புரங்கள் செற்ற வெஞ்சிவனை
திருவீழிமிழலை வீற்றிருக்கும்
கொற்றவன் தனைக் கண்டு யென்னுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே !

அக்கனியை சிவம் என்றும், கந்தன் என்றும், கண்ணன் என்றும் அழைப்பதுண்டு. இதனை உண்டவர் முக்திபெற்றவர் என்றே வேதங்கள் கூறுமாம்.

கொண்டதுங் காயம் உண்டது மங்கனி
வண்டினமுங் காணு கண்டிலு மின்சுவை
விண்டது மென்மயம் ஆண்டது சிவமயம்
மாண்டது மாணவம் பூண்டதும் முத்தியே.

சக்தியை யடக்கி நின்ற சிவம் வித்தாய் விளங்குகிறது. விதைத்த வித்து கிளைத்தெழுங்காலையில் சக்தி சிவத்தை வளர்க்கின்றது. கடைசியில் வளர்ந்த சக்தி அடங்கும் இடம் சிவம் எனும் வித்தே.

சிவமெனும் மரம் மகிழ்ந்து, பச்சென்று இலைகள் விட்டு, பராசக்தியின் உருவமாய் விரிந்து, அச்சக்தி புஷ்பித்து, கந்தன் எனும் கனி ஈன்றது போலும்! பழனியில் வந்து தவம் புரிந்து கந்தன் தானே பழமாய், பூரணமாயும், ப்ரம்மமாயும், உள்ளத்தைத் தெரிந்துகொண்டபின்பு பழத்தாசை விட்டு, பழமாய் நின்றுவிட்டான். இவன்தான் தாய் தந்த தலைமகன்.

அப்பர் சொல்லுவார்:

முன்னையார் மயிலூர்தி முருகவேள்
தன்னை யாரெனில் **தானோர் தலைமகன்**
என்னையாளும் இறையவன் எம்பிரான்
பின்னையாரவர் பேரயிலாளரே.



தாயின் அடி

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது யாவரும் அறிந்த மேன்மொழி. ஆசாபாச காமக்ரோதங்களை அடக்கி ஆணவத்தைத் துறந்த பெரியோர்கள், அன்பில் ஈடுபட்டு ஆனந்த வாழ்க்கையில் நிற்பர். பேரானந்தம் எது என வினவ பட்டினத்தார் மொழிந்தது :

> சுரப்புற்று வல்வினை சுற்றமற்று தொழில்கள் அற்று
> கரப்பற்று மங்கையர் கையிணக்கற்று கவலையற்று
> வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி—மனமடங்கப்
> பரப்பற்றிருப்பதன்றோ பரமா! பரமானந்தமே.

இங்ஙனம் பரமானந்தத்தில் தேக்கித் திளைக்கின்ற ஞானிகள் இதயபாவத்தில் குழந்தைகள் போலவும், அறிவினில் முதிர்ந்த உணர்ச்சியுடையவராகவும் விளங்குவர் பற்றற்றவர்கள். இப்பெருமக்கள் உலகில் எல்லா மங்கையர்களையும் தாய்போல் கருதி, தமர்போல் யாவர்க்கும் தாழ்மை சொல்லி, சேய்போல் இருப்பார்கள். ஜகன்மாதாவாகிய பராசக்தியின்தோளேறி விளையாடுவார்கள். குழந்தைபோல் விளங்கும் குருநாதனை

> சொந்தமாய் எடுப்போர்க்கெல்லாம் குழந்தை
> இப்படி உலாவும் என் குருநாதன் வாழி

என்று பாடியுள்ளார்கள். இவ்விதம் அபேத அன்பாய் ஒளிரும் மஹான்களின் இதயம், நிறைந்த உருவாய் நின்ற தாய்மடியிலேறி விளையாட, மஹான்களின் அறிவோவெனில் தாயின் அடியையே நாடி

நிற்கும். தாயின் பாதாரவிந்தத்தின் பெருமையை தாயுமானர் கூறுகின்றார். ஒருவன் தாயின் அடியில் தன் கருத்தை வைத்து விட்டால் அவன் அடையும் க்ஷேமத்தை விவரிக்கிறார்:

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள் பக்கமுண்டு,
எக்காலமும் பவுசுண்டு தவசுண்டு
திருஷ்டாந்தமாகவே யெமப்படர் எனும் திமிரம் அணுகாத
கதியுண்டு ஞானமாம் கதிருண்டு
சதிருண்டு காயசித்திகளுமுண்டு கரையுண்ட கண்டர்பால்
அம்மை உன் தாளில் கருத்தொன்று உண்டாகுமேல்

என்றார். அதாவது உலக ஸ்ருஷ்டியில் நவநிதிகளைப் படைத்து அவைகளை ஜீவராசிகளுக்குத் தியாகம் செய்து தான் ஆண்டியாய் அம்பலத்தில் ஆடும் சர்வேஸ்வரன் இந்நிதிகளின் போக்கை எவ்வாறு விதித்தார் என்று உணர்தல் வேண்டும்.

ஸ்ருஷ்டி ஒரு சுழல். சூரியன், சந்திரன், இரவு, பகல், செல்வம், தரித்திரம், இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு எல்லாம் சுழன்று சுழன்று வருகின்றன. ஸ்ரீ நடராஜா நடனத்தில் எவ்வாறு எங்கும் எல்லா உலகங்களிலும் எல்லா ஜீவராசிகளை அநுக்ரகிக்க சுழன்று சுழன்று நர்த்தனம் செய்கின்றாரோ அதுபோல் எல்லாப் பொருள்களும், சராசரங்களும் ஈஸ்வரனையே பற்றாக உடைய தன்மையை கொண்டதினால் அவைகளும் சுழல்கின்றன. தாயின் பாதாரவிந்தத்தின் சோலையில்தான் நவநிதிகளும், சவுக்கியங்களும் சுழன்று தரிக்கின்றன. ஆகவே மக்கள் ஜகன்மாதாவாகிய பார்வதியின் பாதத்தை கருத்தில் கொண்டால், எல்லா சௌபாக்யங்களையும் அடைய காரணம் ஏற்படுமென்று உபதேசித்தார்.

ஆதிசங்கரர் லலிதா தேவியை பிரார்த்தனை செய்ய ஒரு பஞ்சகம் பாடியுள்ளார். ஸ்ரீ வே. நாராயண அய்யர் அதற்கு ஒரு அருமையான தமிழ் மொழிபெயர்ப்பு வரைந்துள்ளார். அச்சுமிட்டுள்ளார். வடமொழி தெரியாத மக்களுக்கு இது ஒரு பேருதவி. காலையில் விழித்த குழந்தையின் முதல் எண்ணம் தாயின் முகமாம். அம்மாவின் விசால நெற்றியும், அதில் விளங்கும் குங்குமமும், செக்கச் சிவந்த இதழும், புல்லாக்கணைந்த நாசியின் சோபையும், புன்னகை கலந்த முகவிலாசமும், பார்வையிலே உலகத்தை அளித்துக் காக்கும் கருணையும், குழந்தையின் ஸ்மரணத்தில் வந்து நிற்கின்றனவாம். அம்மாவின் தோள் பிரதேசங்களில் தாவி விளையாடும் உரிமையைக் கொண்டாடி பஜிக்கின்றதாம். ஞானமயமாய் நிற்கும் அம்மையார் அறிவு உருவத்தின் பாதாரவிந்தத்தில் நமஸ்கரிக்கின்றதாம். ஸ்தோத்திரம் செய்து நாமங்களைப் பாடிக் கொண்டு இருக்கையில் அம்மா வந்துவிடுகிருளாம். அளவற்ற ஆனந்தமாம். லலிதா பஞ்சகத்தை இவ்வாறு சித்தரித்துவிட்டார் ஆதிசங்கரர்:

ப்ராதர் நமாமி லலிதா சரணாரவிந்தம்
பக்தேஷ்டதான நிரதம் பவஸிந்து போதம்
பத்மா ஸனுதி சுர நாயக பூஜனீயம்
பத்மாங்குச த்வஜ ஸுதர்சன லாஞ்சலாட்யம்.

அபீஷ்டத்தைக் கொடுக்கும் பாதத்தை நமஸ்கரிக்கின்றேன் என்ருர்.

மேலும் உணர்த்துவார்: பேத தாப சம்ஸார சச்சரவிலே தவிக்கும் என் மனது ஓர் குளிர்ச்சியை நாடுகின்றது. அது உன் பாதக் குளிர்ச்சியன்ருே? "சிசிராம் பதாம்போஜச் சாயாம் பரமசிவஜாயே ம்ருகயதே" என்ருர். நல்லது. பராசக்தியாகிய தாய்

எங்கே இருக்கின்றாள் ? அவள் பாதம் கிடைப்பது எங்கே? "ஸர்வம் மாதா மயம் ஜகத்" ஆனதால் தாய் எங்கும் இருக்கின்றாள்.

சப்த ப்ரம்ம்மயி சரா்சரமயி ஜோதிர்மயி வாங்மயி
நித்யானந்தமயி நிரஞ்சனமயி தத்வம்மயி சின்மயி
தத்வாதீதமயி பராத்பரமயி மாயாமயி ஸ்ரீமயி
ஸர்வைஸ்வர்யமயி ஸதாசிவமயி மாம்பாகி மீனாம்பிகே!

என்றார் ஆதிசங்கரர்.

தாயின் தத்வம் உலகத்தில் ஜீவராசிகள் முழுவதிலும் பரந்து நிற்பதால், அவளைக் காணும் பார்வை ஒன்றுதான் நாம் அடைய வேண்டுமாம். இச்சையின் சபலம், தவத்தின் முடிவு இவைகளால் அந்தப் பார்வையைப் பெறலாம். பெற்றுவிட்டால் எங்கும் நிறைந்திருப்பாள் தாய். அவள் பாதம் எங்கும் காணலாம். கண்ட அப்பாதத்தின் மகிமை, கண்டவரை கரையேற்றி, துன்பக் கடலினின்றும் மீட்டு, நித்யானந்த சொரூப சாக்ஷாத்காரம் கொடுத்து, இகபர சௌபாக்யத்தில் வைத்தருளும். இதுவே தாயின் அடி. அதை நமஸ்கரிக்க பெற்றவரே

பெற்றார் பெரும் பேறுபெற்றார்
பெற்றார் பிறவி தீரப்பெற்றார்
பெற்றார் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் **தாயே தானென** பேறும் பெற்றார்.

கேடாவரும் நமனைக் கிட்டவாதே தூரப்
போடா என்றோட்டி உந்தன் **பொற் கமலத்தாள்** நிழற்கீழ்
வாடா என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்
கூடாதென்றார் தடுப்பார் கோமளத் தாய் ஈஸ்வரியே.

தாயின் மடி

தாயின் மடி என்ன அழகு! மடிக்கேற்ற குழந்தை; குழந்தைக்கேற்ற மடி. அன்பும் அருளும் மாருத மடு போன்றது அன்னையின் மடி. வடிவமும் இளமையும் சோராத குமரன், அவன் முருகன்தான். தாய்கண்டார் முருகனைக காணுதார் இல்லை. முருகனைக் கண்டார் தாயைக் காணுதாரில்லை. தேவேந்திர வகுப்பு பாடத்தொடங்கிய அருணகிரி, தாயின் பெருமையை முற்றும் பாடி அன்னவள் குமரன் என நாலைந்து வரியில் முடித்துவிட்டார். ஆண்டவன் பெருமை அவர் தானறியார். அடியார் அறிவார்கள். அது போல தாயின் பெருமை தாய் அறியாள்; பிள்ளைக் குத்தான் தெரியும். ஜகத்துக்கு தாயாய் நின்ற ஈஸ்வரிக்கு பிள்ளைகள் கோடானு கோடி. ஜகத்தை யெல்லாம் ஈன்ற தாய் பின்பும் கன்னியாகவே இருக கின்ருள் என்று வேதமே கூறுமானுல் இது என்ன ஆச்சரியம். 'கன்னியழியாத கன்னல் தாய்' என்ருர் ஓர் பெரியார். உலகின்கண் மெஞ்ஞானம் உணர்ந்த எல் லோரும் தாயின் பெருமை கூறும் குழந்தைகளாகவே விளங்கினுர்கள். சிவஞானம் குழைத்த பால் அடிசில் பொற்கிண்ணத்தால் ஊட்டப்பட்ட ஞானசம்பந்தர் என்னும் ஓர் திராவிடசிசு பெரும்புகழ் பெற்ற மஹா கவியாய் விளங்கினுர். ஸ்ரீ சங்கராச்சார்ய பகவானே தாயின் ஞானமுலைப்பாலுக்கு ஆசையுற்று சௌந்தர்ய லஹறியில் பாடியுள்ளார் என்ருல் தாயின் பெருமை என்னே! ஈசன் ஜடையில் விளங்கும் சந்திரனுக்கும் குறைவில்லை. தாயின் மடிக்குழவிக்கும் குறைவில்லை.

தாயின் சாயையில் ஏற்பட்ட பெண் வர்க்கம் முழு வதும் தாயன்ருே? தாயிடமிருந்து வந்தது தாயன்றி

பேயாகுமோ? தாய்பெற்ற பெண், அவள் தாயாய் வளர்ந்து உலகுக்கு அநேக தாய்களைத் தந்திடுவாள். பட்டினத்தாரும் 'நன்மங்கையரைத் தாயென கருதி தமர்போல் யாவர்க்கும் தாழ்மை சொல்லி **சேய்** போலிருப்பர் கண்டீர் பற்றற்றவரே' என்று பாடியுள்ளார். தாய்ப்பண்பை உலகத்தில் பெண்கள் வளர்த்திடல் வேண்டும். உலகம் பரந்த அன்பும், சேவையும், அபேதமும், கொடூரமின்மையும் செறிந்திலங்கும் குணங்கள் பெறவேண்டும். மாயைக்கு இடங்கொடாது பேய் கைப்படாது தாயாக நிற்கும் நம் இந்திய தேவதைகளுக்கு சேயாக நின்று பணிசெய்யும் ஆற்றலைப் பெற்றிடல் வேண்டும். இந்திய மாதர்களின் அடிப்படையான தர்மம் இது. இதனைப் பெண்மணிகள் கைக்கொள்வாராக. பாரதியாரும் தாயெல்லாம் தெய்வமானால் பெண்ணெல்லாம் தாயன்றோ, பெண்ணெல்லாம் தெய்வம்தானே என்று பாடியுள்ளது புதுமையோ? குழந்தை பாவத்தோடு தாய் மடியில் வீற்றிருந்தால், காலம் என் செய்யும். வினை என் செய்யும். நித்ய குழந்தையாய் விட்டால், தினம் தினம், பாரதியார் சொல்லியவாறு பிறந்து விட்டால், வயதேது? மரணமேது? இத்தகைய ஞானம் ஊட்டுவதும் தாய்த்தன்மை யன்றோ? பெரிய ஆணவப் பேய்களாய் வளர்ந்து தாய்களைச் சிறையிட்டது போதும். முதிர்ந்த குழந்தைகளாய் வளர்ந்து தாயைப் பூஜித்திடல் வேண்டும். மாயப் பேயை ஒழித்திடல் வேண்டும். சுயராஜ்ய இந்தியாவில் தான் உள்ள ஸ்வாதீனமற்ற மக்களுக்கு விடுதலை கிடையாது. ஆகையால் தாயும் குழந்தைகளுமாய் புதிய சுயராஜ்யத்தை வளர்ப்போமாக.

வெளியில் அடிமைகளாய் இருந்தால் விலக்குண்டு. உள்ளத்தில் கள்ளத்துக்கு அடிமைப்பட்டால் இந்தத் துயரினுக்கு முடிவுமுண்டோ?

ப்ரம்மேச கேசவ முகைஹி—பெருபிஹி குமாரைஹி
பர்யாயதஹ பரிக்ருஹீத விமுக்ததேசம்
உத்சங்கம் அம்ப தவ தாஸ்யஸி மேகதாத்வம்
மாத்ரு ப்ரியம் கில ஜடம் ஸுதம் ஆமனந்தி

(ஆனந்த ஸாகரஸ்தவம்) ஸ்ரீ நீலகண்ட தீக்ஷதர்

(தாயே நின்மடியில் ப்ரம்மேச கேசவாதி எண்ணிறந்த குழவிகள் வந்திருந்து விட்டு விளையாடி சுகித்திருக்க, யானும் நின்குழவியென்று கருதி உன்மடியில் இடமெனக்கு தருகின்ற நாள் எந்நாள்! அறிவற்ற ஜடப்பிள்ளையாயினும் தாயின் அன்பு அவரிடம் சால எனும் வழக்குக் கிழுக்குமுண்டோ?)

கண்ணைத் திறந்தேனம்மா—வெளி
மாயம் ஒளிர்ந்ததம்மா
கண்மூடி நின்றேனம்மா—உள்ளுளே
கண்கூடாக் கண்டேனம்மா
பாலைக் கடைந்தேனம்மா—போற்றும்
நெய் தயிராயிற்றம்மா
பாலுள் கலந்தேனம்மா—போற்றும்
நின்மய மானேனம்மா
தாயை மறந்துலகம்—அம்மம்ம
தாக்கி யழிந்ததம்மா
தூய்மை உறநோக்காணில்—வையம்
ஓங்கி தழைக்குமம்மா
எல்லையில் ரூபங்கொண்டு—உன்னருள்
எங்கெங்கும் நின்றதம்மா
தொல்லைதாய் நீயேயென்றால்—அம்மம்ம
ஏகமாய் தோன்றிடுவாய்
கொண்ட கருத்தெல்லாம்—தாயேநின்
விண்ட விலாஸமன்றோ!

தாய்மடிக்கிச்சை கொண்டோர்—மற்று
வேறெங்கு மிச்சை கொள்ளார்
தாயை மறந்திட்டக்கால்—துன்ப
நிறைவினை நினைத்தென்பயன்
உண்பதெல்லாம் தாய்ப்பாலே—என்றென்றும்
கொண்பதெல்லாம் தாயருளே
காணும் உலகக்கூத்து—அவள்
பேணும் திருவிளையாட்டே
ஸ்ரீமாதா ஸ்ரீசக்தி ஆதிசக்தி—என்றே
போற்றிட்டார் இடரற்றார் புகழுற்றார்
ஸ்ரீமாதா ஸ்ரீசக்தி ஆதிசக்தி—என்றென்றே
பாடி நிற்பாய் நன்னெஞ்சே!



தாலாட்டும் தவம்

விண் என்னும் உத்தரத்தில் அன்பெனும் தாம்பிட்டு மண் என்னும் தொட்டிலிட்டு எண்ணடங்கா ஜீவன்களாகிய குழந்தைகளை ஏற்றி, 'கண்வளராய்' என்று ஆட்டும் தாய் பக்கத்திலேயே நிற்க, கவலை யேன்? ஆயினும் குழந்தைகள் இயல்பு கொஞ்சம் அழத்தான் அழும். செல்ல அழுகையுமுண்டு, கள்ளழுகையுமுண்டு, நிஜ அழுகையுமுண்டு. ஏமாற்றமோ, நோவோ, எவற்றினலாயினும் குழந்தைகள் மனமுறிந்தால் அம்மாவிடத்தில் சொல்லியழுதால்தான் ஆறுதல். இந்த ஆறுதலுக்கு இணங்காத வருத்தம் குழந்தைகளுக்குக் கிடையாது. "யாராரடித்தாளோ அடித்தாரைச் சொல்லியழு" எனப்பாடுவள் தாய். நொந்த மனம் அம்மாவிடம் சொல்லி அழுதுவிட்டால் சரியாய்ப் போய்விடும். இதையறிந்த தாய் குழந்தையழ அதை தொட்டிலிலிட்டு பக்கத்தில் நின்று பாடிடுவாள்.

தாயின் மனம் குழந்தையிடந்தான். அவள் குழந்தையையா ஆட்டுகின்ருள்? இல்லை! தன் மனத்தையும் அத்தொட்டிலிலிட்டு ஆட்டுகின்ருள். தன் மனம் பூரிக்கின்றது. நெகிழ்ந்த மிடறினின்று பெருகும் மகிழ்ந்த இசைகள்; அவிழ்ந்த அன்பின் உணர்ச்சி; செந்தமிழ் அமுது பொழிகின்றது. குழந்தையின் கண்கள் தாயின் முகத்தினையே நோக்கி நிற்கின்றன. அவள் புன்சிரிப்பை நுகர்ந்து நுகர்ந்து அந்த போதையினல் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பின் உணர்வழிந்து தாயின் முலையருந்துவது போல் கனவில் மாறி தாய் நினைவில் தூக்கம் உறுகின்றது. யார்தான் இதை அறியமாட்டார்.

நாள் முழுதும் வேலை. சரீரம் மிக அலுப்புக் கொண்டது. சேயைப் பார்த்து பாடிப்பாடி தொட்டில் கயிற்றில் தன் உடம்பின் பளுவை ஒரு பக்கமாய் சாய்த்து, "குழந்தை தூயில் கொண்டதா, தூயில் கொண்டதா" வென்று பார்த்தவண்ணமாய் தாயும் தன்னை மறக்கின்றாள். சேயும் தாயாகி தாயும் சேயானால் எய்தும் நிலையாதோ ? சமாதி.

தாயின் வயிற்றில் அவதரித்துப் பிரிந்த சுகம், தாயுடன் சமாதியில் கூடும் சுகம்தான். மக்கள் பிரிய வேண்டும், பிரியவும் பிரிகின்றார்கள். பிரிந்த பலன் சேர்க்கைக்கன்றோ ? யோக சமாதியை யல்லவோ தாலாட்டும் தாய் போதிக்கின்றாள் ?

இந்த சுகத்தை அனுபவிக்க நினைத்தாள் பராசக்தி. முருகனைப் பெற்றாள். "பெற்றும் உகந்தது முருகனையே" என்று ஞானசம்பந்தர் பாடினார்.

சுடர் ஜோதியாய் உதித்த முருகனுக்கு வெப்பத்தின் சாந்தமாக சரவணத்தில் செந்தாமரைப் புஷ்பமாக தொட்டில் சமைத்திட்டாளாம். அருணகிரியார் திருப்புகழால் தாலாட்டுகிறார் :

முக்கணர் மெச்சிய பாலா சீலா
　　சித்தஜன் மைத்துன வேளே தோளார்
　　மொய்த்த மணத்துழாயோன் மாயோன் மருகோனே
முத்தமிழ் வித்வ விநோதா கீதா
　　மற்றவர் ஒப்பில ரூபா தீபா
　　முக்திகொடுத்தடியார் மேல் மாமால் முருகோனே.

முருகன் அழுதாராம். "ஏன் அழுகின்றாய் கண்ணே ?" என்றாள் பார்வதி. மறுபடியும் முருகன் நீண்டு அழுதவுடன் குறிப்பாய் கவனித்தாள். வேறு அழுகைக்

குரல்கள் கேட்டனவாம். மாயையின் அழுகைக்குரல் கேட்டதாம். சூரன் அழுகை, சம்சார சமுத்திரத்தின் அழுகை ஓசை. இவற்றுக்கு ஒத்து முருகன் அழுகைக் குரலும் கேட்டதாம். முருகன் குறும்புக் குழந்தையல்லவா?

யாராவது அழுதுகொண்டிருந்தால் குழந்தைகளுக்குப் பிடிக்காது. அழுகையின் அழகை பரிகசிப்பதுபோல் தானும் கள்ளத்தனமாய் அழுதுவிட்டு ஓடிவிடும். இது குழந்தையின் இயல்பு. கிரௌஞ்சக் குன்று, சூரன், சம்சார சமுத்திரம் இம்மூன்றும் கெட்டுப்போக காலம் வந்ததால் அவை அழும் அழுகைக்கு ஒத்து ஒரு ஸ்ருதியாய் தானும் அழுது காண்பித்தானும் முருகன். பராசக்தி ஆனந்தித்தாள். இதை சித்திரிக்கின்றார் அருணகிரி:

திருந்தப் புவனங்களீன்ற பொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டிலேறி யறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றேதுங் குவலயமே.

இது கந்தரலங்காரச் சித்திரம்:

கண்ணனை தொட்டிவிட்டாரோ?
அவனை யாரென ஆராய்ந்தாரோ?
தன்னை மறந்தாரோ?
உணர்ந்தவகை யாரறிவார்?

சடகோபாழ்வார் பாடுகின்றார்:

ஒளிமணி வண்ணனென்கோ ஒருவனென்று ஏத்தநின்ற
நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ
அளிமகிழ்ந்து உலகமெல்லாம் படைத்தவை ஏத்த நின்ற
களிமலர் துளவன் எம்மான் கண்ணனை மாயனையே!

கண்ணனை மாயன் தன்னைக் கடல்கடைந்தமுதம் கொண்ட
அண்ணலை அச்சுதனை அனந்தனை அனந்தன் தன்மேல்
நண்ணி நன் குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்த மாலை
எண்ணுமாறறியமாட்டேன் யாவையும் அவருந்தானே.

உலகுக்கெல்லாம் ஒப்பற்ற சேயாய், சொந்தமாய் எடுப்போர்க்கெல்லாம் குழந்தையாய், நம் குருவாய் தாவிவரும் முரளிமுருகனை தாலாட்டக் கற்ற அன்பர்கள், உலகில் இருக்கும் ஜீவன்களை தம் குழந்தைகளாகவும், மங்கையர்களை தாய்மார்களாகவும் கருதி, பட்டினத்தார் உபதேசத்துக்கு ஒப்ப பேரின்பம் அடைவர் என்பதில் ஐயமுண்டோ? இல்லை என்கிறான் முரளி முருகன்.



ஜோதி

ஜோதியைக் கண்டால் எல்லாருக்கும் ஒரு ஆனந்தம். அது ஒரு காந்த சக்தியை உடையது போலும். வீட்டில் விளக்கேற்றி ஒளி பரப்பி நல்ல தினங்களைக் கொண்டாடுவார்கள். கார்த்திகை மாதத்தில் சொக்கப் பானை கட்டி எரியவிட்டு ஜோதி ரூபம் கண்டு ஆண்டவனைப் பேணுவார்கள். உலகெலாம் அளித்துக் காக்கும் சூரியன் பெருத்த ஒரு விளக்கொளி. அம்புலியும் மகிழ்ச்சியே உருவமான குளிர்ந்த ஒளி. உலகெலாம் ஜோதிமயமாய் விளங்க அக்னியிலும் ஜோதி விளங்குகிறது. உஷ்ணத்தையும் தருகின்றது. விட்டில் பூச்சிகள் தங்கள் உயிரையே விளக்கொளியில் அர்ப்பணம் செய்கின்றன. கண்ணிலும், அறிவிலும் ஒளி நிற்க, உடம்பில் தேஜஸ் என்ற பிரகாசம் கலந்து நிற்க, உயிர் நின்றால் குறைவு காணாத உஷ்ணமும் நிற்க, மானிட தேகத்தில் மாத்திரம் எங்கும் நிறைந்த ஜோதி இல்லையோ என்பது கேள்வி. அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள் மூன்று ஆழ்வார்கள். அக்னியை வளர்க்க நெய்யினால் ஆஹூதி செய்து சமித்து கட்டைகளையிட்டு, ஜோதியைக் கண்டு தொழுகின்றனர். இவ்விதம் உள்ளே ஜோதி வளர்த்தால் அதைக் கண்கூடாக காண்பதோடு அதனால் வரும் காந்த சக்தியினால் உலகையே ஒருமைப் படுத்திவிடலாம்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

அன்பும் ஆர்வமும் ஒருங்குற்ற பண்பில், சிந்தை முனை யில் ஆருயிர் கருத்தாக விளக்கேற்றி ஞானம் சுரந்த தமிழ்ப் பாக்களால் நாரணனைக் கண்டார் ஒரு ஆழ்வார். கோயில்கள் பேசியுணர்த்தும் தத்துவம் இதுவன்றோ? விளக்கேற்றி பகவதியை ஒளியில் ஆவாகனம் செய்து பூஜிப்பதும் இவ்வகைத்தன்றோ? ஞானத்தமிழ் உரைத் தால் விளக்கு ஏற்றிக் கொள்ளுமாம். "சொல்லில் உறைவது ஜோதி."

> சொல்லக விளக்கது ஜோதியுள்ளது
> நல்லக விளக்கது நமச்சிவாயவே.

அப்பர் சொல்லியது இது,

மற்றொரு ஆழ்வார், ஏற்கனவே ஏற்றியிருக்குமோர் விளக்கை யெடுத்து ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்தார்.

> வையம் தகளியாக வார்கடலே நெய்யாக
> வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
> சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
> இடராழி நீங்குகவே என்று.

பூமி தகளியாம். கடல் நெய்யாம். உதித்திடும் சூரியன் விளக்காம், ஆழ்வார் இப்படிக் கருதினார்.

உள்ளும் புறத்தும் விளக்கொளி வீச ஈசனை உள்ளத்துள் கண்டனர்.

> திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
> அருக்கன் அணி நிறமும் கண்டேன்—செருக்கிளரும்
> பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
> என்னாழி வண்ணன்பால் இன்று.

அப்பர் ஸ்வாமிகள் "**ஆழி வண்ணமும் ஆவர் ஐயாறரே**" என்று ஈசன் வண்ணத்தை வகுத்தார். சிவம் என்பது ஜோதி.

ஞான சம்பந்தர் பாடியது "**சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்து இலங்கும் ஜோதி நீ.**"

பட்டினத்தார் ஜோதியை எங்கும் கண்டார்.

எட்டுத் திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டுத் ததும்பி முளைத்தோங்கும் ஜோதி.

ஐயாரப்பன் க்ஷேத்திரமாகிய திருவையாறனை

தேச விளக்கெலாமானாய் நீயே திருவைய
றகலாத செம்பொற் ஜோதி இதை யான்மறவேன்.

என்று அப்பர் பாடினார்.

சுந்தரமூர்த்தி அடிகள்,

சொற்பதப் பொருள் இருள் அறுத்து
அருளும் தூய ஜோதி இதை யான் மறவேன்

என்று பாடியுள்ளார்:

அருணகிரியார் முழுமுதற் கடவுளாம் முருகனைப் பாடுங்கால்

திருக்கை சேவல் கொடியோனே
ஜகத்தில் ஜோதிப் பெருமானே

என்றார்.

மேலும் பாடுவார்:


ஜோதி யுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமது தந்து எனையாள்வாய்

ஜோதி யுணர்ந்து, ஜோதியில் இரண்டறக் கலந்து நிற்பதே ஹம்ஸ நிலையென்று கூறியுள்ளார்.

திருப்பரங்குன்றத்தில் உறைவதும் அந்த அருட்பெருஞ்ஜோதிதான். அருட்பெருஞ்ஜோதியை உபாஸித்த நமது ராமலிங்க அடிகள் வாழுந் தீபோல் வாழ்வளித்து காத்து ரக்ஷிக்கும் ஜோதியின் திறம் யாது என்று ஆராய்ந்து நின்றார்.

ஏகமோ வன்றி யநேகமோ வென்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடு மானதோ வதுவோ
யோகமோ பிரிவோ வொளியதோ வெளியோ
உறைப்பதெற்றோ வென வுணர்ந்தோர்
ஆகமோடுரைத்து வழுத்த நின்றோங்கும்
அருட்பெருஞ்ஜோதி யென்னரசே.

எல்லாம் சிவமயம், மாதா மயம், குகமயம், விஷ்ணுமயம், பிரம்ம மயம். எப்படியோ வெனில் எல்லாம் ஜோதிமயம்.



நிழல் தரும் எழிலி

மேகத்தின் வர்ணத்தை மாயன் மேனியில் வைத்தார். முருகன் தன் ஊர்தியாம் மயிலில் வைத்தார். ஆனால் எழிலியின் வண்ணத்தை இருவரும் தம் எண்ணத்தில் வைத்தனர். பணியும் அடியார்க்கு மேகம் போல் உதவும் இயல்பு ஆண்டவன் இயல்பு. அது என்னே!

முதிர்ந்த கோடை. ஆறு, தடாகங்கள், வாய்க்கால்கள் எங்கும் வரட்சி. ஒரு சொட்டு நீர் கிடையாது. பாதையில் செல்கின்றான் ஒரு வழிப்போக்கன். மணல் தணல் போல் சுட்டுத்தள்ளுகிறது. நிழல் அண்டையில் கிடையாது. மரமெலாம் பட்ட மரம் போல இலைகளற்று குச்சி குச்சியாய் நிற்கின்றன. தவிக்கிறான். என்னதான் செய்வான்? பாவம்! தன்னையு மறியாமல் ஆண்டவன் நாமத்தைக் கதறுகின்றான். அவ்வேளையில் ஒரு மேகம் தென்திசையில் காணப்பட்டது. காற்றின் வேகத்தால் ஏவப்பட்டு சூரியனின் கிரணங்களை மறைத்தது. வழிப்போக்கன் 'அப்பா!' என்று பெருமூச்சு விட்டான். "இந்த மேகம் நல்ல வேளையாய் நிழலைக் கொடுத்தது" என்றான்.

நிழலினால் அடைந்த பயன் மேலும் மீண்டுவரும் கிரணங்கள் தடைப்பட்டதுதான். சுகம்தான். மேகமோ அத்துடன் நிற்கவில்லையாம். கூட்டமாகச் சேர்ந்து மழையாய்க் கொட்டிவிட்டதாம். ஏற்கனவே இருந்த தாபத்தையும் போக்கிவிட்டது. பூமி குளிர்ந்தது. வழிப்போக்கன் செய்த புண்ணியம்.

எந்த காய்ச்சலால் வழிப்போக்கன் வருந்தினானோ, அதே காய்ச்சலால்தானே மேகம் தண்ணீரை முகந்தது. சமுத்திரத்தில் இருக்கும் உப்பு நீரையா முகந்து கொண்டு வருகின்றது மேகம்? அல்லவே! உப்பை யகற்றி அப்புவை சுத்தமாய் பேதித்து காருண்ட மேகம் ஆகாசக் கங்கையென்று சொல்லக்கூடிய துல்யமான தண்ணீரைக் கொட்டுகின்றது.

இதை ஒரு பெரியார் வர்ணிக்கின்றார்.

"மேகத்தின் வண்ணம் இகபரத்தாசை யகற்றிய பெரிய யோகிகளின் வண்ணம்" என்றார்.

கடல் நீரைக் கொண்டு, உப்பைத் தவிர்த்து, நல்ல நீரைப் பொழிகின்றது மேகம். அந்த நீர் பூவுலகுக்கும், வானுலகுக்கும் கங்கைபோல் தூய்மையாய் விடுகின்றதாம். நீரில் இருக்கும் துவரைக் கெடுத்து அதை சுத்தமாக்கி விடுகின்றதாம். இது யோகிகளின் இயல்பு என்றார். தீய கர்மங்கள் செய்து, தீவினையினால் பீடிக்கப்பட்டு ஈட்டிய பொருள்களைச் சுத்தம் செய்யவும் வகையுண்டோ? உண்டு என்கின்றார்.

தீவினையால் ஈட்டிய பொருளை, தீவினையின் கொடுமைக்கேற்ப, அதில் சரியான ஒரு பாகத்தை ஆசையற்ற யோகிகள் கைப்படும்படி அவரிடம் தானம் செய்துவிட்டால்—அதாவது அவர்கள் முகமாய் செலவு செய்து விட்டால்—எஞ்சிய பொருள் தூயவையாய், தீவினையற்று, சௌபாக்யத்தைக் கொடுக்கும் என்றார். பரஞ்ஜோதி முனிவர் :

இழிந்த மாந்தர் கைப்பொருள்களும் இகபாத்தாசை
கழிந்த யோகியர் கைப்படின் தூயவாய்க்களங்கம்
ஒழிந்தவாறுபோல் உவரியுண்டு உவர் கொடுத்து எழிலி
பொழிந்தநீர் அமுதாயின புவிக்கும் வானவர்க்கும்

நிழலைக் கொடுத்து, தூய தண்ணீரை யளித்து, வெப்பத்தை நீக்கும் மேகத்தின் தன்மை தெய்வத்தின் தன்மை. இயல்பு.

ஆசாபாச காமக்ரோதங்களால் எரிக்கப்பட்ட சுண்ணாம்புக்காளவாயில் வீழ்த்தப் பட்டப் பொழுது பரமசிவன் இணையடி நிழலில் நின்றார் அப்பர் ஸ்வாமிகள்.

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன் கந்தவேள் முருகா
நதிதனை யன்ன பொய் வாழ்விலன் பாய்நரம்பாற் பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடுமா றெனைப் போதவிட்ட
விதிதனை நொந்து நொந்திங்கே என்றன்மனம் வேகின்றதே!

என்று அருணகிரி கந்தரலங்காரத்தில் கதறுகின்றார். அருணகிரியார் வீழ்த்தப்பட்ட சுண்ணாம்புக் காளவாய் இது. பரமசிவன், முருகன் இவர்கள் பாதத்தை நினைத்ததும் வேக்காடு தவிர்ந்து குளிரப்பெற்றார்களாம். எப்படியோவெனில் தேவாரம் புகலும்:

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நிழலே!

பரமசிவன் 'நிழலாகி' நிற்பதாக அப்பர் பாடியுள்ளார். மேகத்தின் வண்ணமாய் வந்து ஆனந்த வாரிதியாய்ப் பொழிந்து அன்பர்களை அறைகூவியாளும் கருணையை தாயுமானார் அற்புதமாய் விளக்குகின்றார்:

காரார எண்ணரும் அனந்தகோடிகள் நின்று
காலூன்றி மழை பொழிதல் போல்
கால்வீசி மின்னிப் படர்ந்து பார
வெளியெலாம் கம்மி
ஆனந்தவெள்ளம் சோராது பொழியவே
கருணையில் முழங்கியே
தொண்டரைக் கூவு முகிலே!

கடவுளை நிழல் தரும் எழிலியாகவும், ஆனந்த வெள்ளம் சொரியும் கார்மேகமாகவும் அனுபவித்திருக்கும் திறம் அரிது, அரிது! மேகமாம் கடவுள் இந்த மழையை எங்கே பொழிகின்றார்? எந்த ஆகாய வெளியில்? அன்பர்கள் மன ஆகாய வெளியில் கொட்டுகின்ற கருணை மழை அவர்கள் "கண்ணும் விண்ணும் தேக்கவே!" அன்பர் மனோ ஆகாயத்தில் தெய்வம் மேகமாய்ப் பரவி, ஆசாபாசக் காமக்ரோதங்களால் எரிக்கப்பட்டு தவிக்கும் மனதை, அத்திய கிரணங்களால் நலியாமல், தான் மேகமாய் நின்று, நிழல்தந்து, ஆனந்த மழை பொழிந்து, கண்ணீர் சொரிய, ஆனந்த வெள்ளத்தில் அன்பரைக் காக்கின்றார். ஆகவே நிழல் தரும் எழிலி யார்? கந்தனோ? ஆமாம் அவர்தான். எழிலி வடிவினன் என்று அருணகிரி பாடிய கண்ணனோ? அவரும்தான். எல்லாம் ஒன்றென்று உணர்ந்தபின் கண்ணன் வேறோ கந்தன் வேறோ? எல்லாம் என் அம்மையப்பன்தான்.



உஷார்

விரோதி! விரோதி! விரோதி! என்னும் சப்தம் காதில் ஒலித்தது. உடனே நண்பர்களிடமிருந்து உஷார்! உஷார்! உஷார்! என்ற எச்சரிக்கையும் காதில் எட்டியது. இது என்ன கனவா? நனவா? என்றது மனம். ஆம். இரண்டும்தான். மேலும் உண்டு. கர்ப்பமும் கூட என்கிறேன். 59 வருஷங்களாய் மறைந்த ஒரு வருஷம் மறுபடியும் பிறந்ததாம். அதன் பேர் விரோதியாம். மானிடர்கள் உஷார்! உஷார்! என்று எச்சரிக்கை செய்துகொள்கிறார்களாம். கடவுள் காலத்தை ஸ்ருஷ்டி செய்தார். மானிடரை அதற்குள் புகட்டிவிட்டார். தான் காலத்துள் மறைந்து அதனுள்ளே கிடக்கின்றார். காலத்தைக் கடந்து உட்சென்றால் கடவுள் கண்படுவார். கண்ணும்பூச்சி விளையாட்டு. மானிடா! கடவுளைக் கண்டுபிடி! உனக்கு ஒரு எத்து சொல்கிறேன். கடவுளை நீ காலத்தில் புகட்டிவிடு. முப்போதும் எப்போதும் 'முருகா' என்றும், அல்லது உனக்குகந்த திருநாமத்தால், ஒப்பற்ற கடவுளை ஒவ்வொரு நிமிஷத்திலும், உன்கால உணர்ச்சியில் புகட்டி நின்றால் உத்தம வஸ்துவான ஜோதி உன் உள்ளத்துள்ளே ஒளிரும். இது பெரியோர்களின் அனுபூதியாகும். இவ்விதம் காலத்தை வென்ற இடம்தான் இராப்பகல் அற்ற விடம்.

காலத்தின் இயல்புதான் என்ன! ஒரு குடத்தில் ஜலத்தைவிட்டு, அதை நன்றாகச் சுழற்றிவிட்டால் குடம் இருந்த இடத்தில் சும்மாவிருக்க, குடத்திற்குள் ஜலமானது எப்படி சுழலுமோ அதுபோல கடவுள் எனும் பாத்திரத்திலே அருள் எனும் ஜலம் சுழன்று வரும் நிகழ்ச்சியே காலம். குடத்தில் சுழலும் தண்ணீர்

தன் வேகத்தால் குமிழிகள், நுரை, முதலியவைகளை உண்டாக்கிக் கொள்வதுபோல், கடவுள் என்னும் குடத்துள் சுழலும் அருள்வெள்ளம் வையகம் என்றும், பதினுன்கு உலகங்கள் என்றும், இயற்கையென்றும் விந்தாடவியான நிகழ்ச்சிகளை விளைவித்துக் கொள்கின்றது. இந்த விசித்திரத்தைப் பார்த்து புத்தி மயங்காமல் அறிவினுல் அருளின் இயக்கம், அன்பின் ஆற்றல் என்று உணர்ந்த முனிவர்கள் சுழலிலிருந்தும் சுழலைத் தாண்டி நிற்பர். அருளில் நிற்பர். பரமாய் இருப்பர். ஆக்கலும், நிலை நிறுத்தலும், அழித்தலும் சுழலின் தன்மை. சுழலோ அருள் வெள்ளம்! பரம்!

காலம் என்ற தத்துவம்தான் என்னே? ஒரு உணர்ச்சி. ஒரு நிமிஷத்தை நாம் உணருங்கால் உணர்ந்து நிற்கும் போதே நிமிஷம் ஓடிவிடுகின்றது. ஒவ்வொரு நிமிஷமும் நமது உணர்ச்சியில் பிறந்து இறந்துவிடுகின்றது. ஒரு நிமிஷம் போல்தான் ஒரு ஆயுள், ஒருயுகம். பிறப்பும் இறப்பும் கூடும் இடம்தான் காலம் என்று சொல்லலாம். பிறந்த நிகழ்ச்சி இறப்பதும், இறந்த நிகழ்ச்சி கர்ப்பமாய் எதிர்த்து வருவதும், எதிர்த்து வரும் அனுபவம் மறுபடியும் நிகழ்வதும் காலத்தின் தன்மை. மனம், சுடுகாட்டிற்குப் போகும் பிணங்களை எண்ணுகின்றது ஒருபால். மற்ருெரு பால் பிறக்கும் ப்ரஜைகளை எண்ணுகின்றது. இந்த பிறப்பிறப்பு கணக்கை (Birth & Death Register) நீத்த மனம் யோகியர் மனம். அவர்கள் சிவயோகிகள் என்றும், காலத்தை வென்றிருப்பார்கள் என்றும், அருணகிரியார் உபதேசிக்கின்ருர்.

> ஆவதும் பாத்துளே அழிவதும் பாத்துளே
> போவதும் பாத்துளே புகுவதும் பாத்துளே
> தேவரும் பாத்துளே திசைகளும் பாத்துளே
> யாவரும் பாத்துளே யானு மப்பாத்துளே

என்ருர் சிவவாக்கியர்.

நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் கோலக் குறத்தியுடன் எந்நேரத்திலும் வருவான் என்றார்.

முருகனன்றி நேரமில்லை, வேளையில்லை. நேரமும் வேளையும் அவன் செயல். அவன் சூழ்ச்சி. ஆதலின், காலத்தில் முருகனை உணர்ந்தால், முருகன் காலத்தை கடந்து நின்றும், காலம் தன்னுள் அடங்கும் தத்துவமாதலால் முருகனை உணர்ந்த உணர்ச்சி, காலத்தைக் கடந்த உணர்ச்சி. ஆகவே மெள்ள மெள்ள முருகனை நிமிஷம் தோறும் உள்ள நின்ற அடியார் சிவயோகிகளாய்க் காலத்தை வென்று இருப்பார்கள். சாகா வரத்தை பெறுவார்கள். ஒரு வருஷம் பிறந்தது. ஒரு வருஷம் இறந்தது. ஒரு வருஷம் இறந்தாலன்றி ஒரு வருஷம் பிறக்காது. எதிர்த்து வரும் வைபவங்களை நோக்கி காதலித்து, பிறந்த வருஷத்தைக் கொண்டாடி இறந்த வருஷக் கொடுமைகளை நினைத்து ஒப்பாரி வைத்து கூக்குரலிடாமல், இந்த நிகழ்ச்சியிலெல்லாம் இந்நிகழ்ச்சிகளைத்தாண்டி, அவற்றைத் தன்னுள்ளடக்கி நிற்கும் கடவுளை கண்டால், பிறந்த வருஷத்துடன் இறவாமலும், இறந்த வருஷத்துடன் பிறவாமலும், எதிர்த்து வரும் விஷயங்களில் காதலை செலுத்தாமலும் முதல், நடு, ஈறு என்று குறிக்கப்படும் மூவகை காலமும், கணக்கும், நீத்த பிரான் பதத்தில் கருத்தைப் புகட்டி எல்லா காலத்திலும் முன்னிற்கும் முருகனோடு நிலை நிற்கும் பாக்யத்தை அடையலாம். இப்படி உபதேசித்த குருநாதனை நினைத்தபோதெல்லாம் ஆனந்தம் தான். நினையாதபோது ஏழ்மை எம்மை நாடாதிருக்க முருகன் அருள் புரிவாராக.

கண்ணன்

சட்டி யுடைந்ததுவும்
களவு கொண்டதுவும்
வெண்ணெயெல்லாம் தானருந்தி
வெள்வளையை யாண்டதுவும்
பாரிலே பார்த்திருந்தும்
அறிந்தவர்கள் யாருமில்லை
கண்மூடி சுகிப்பாரன்றி
இந்தக் காதல் கண்டார் யாரெவரே
யாரெவரே யாரெவரே
காதல் கண்டார் யாரெவரே !

வெள்வளை தன் பேரையுண்டு
விதமான வஞ்சம் பூண்டு
உறிகள் பலதாங்கி நிற்கும்
அறைகள் கொண்ட அகமதனில்
மறைத்து வைத்த பால் பொக்கிஷம்
பறையன் வந்து பரியிட்டதும்
கள்ளனெனக் கருதி நிற்க
அன்பனவனுகி நின்ற
விந்தைதனைப் பேருலகில்
விண்டறிவார் யாருமில்லை
யாருமில்லை யாருமில்லை இந்த
காதல் கண்டார் யாருமில்லை.

கள்ளனெனக் கடிந்தவனே
வீட்டில் வந்த காவலனே
கள்ளப் பொருள் பறித்து நின்றுன்
பரம்பொருளாய் விளங்கி நின்றுன்
தண்டனைகள் தான் சுமந்தான்
பண்டங்கள் பல வழங்கி நின்றுன்
பெண்டிரினம் தாமறிவார்
கண்டறிவார் யாரெவரே !
யாரெவரே யாரெவரே
கண்டறிவார் யாரெவரே !

கம்பர் கண்ட ராமர்

மஹாகவி கம்பர் ராமாயணம் பாடுந்தோறும் தான் வழிபடுங் கடவுளை பாடல்களால் அடிக்கடி தோத்திரம் செய்து அற்புதக் காவியத்தைப் பாடி முடித்தார். அவர் வழிபடும் கடவுள் யாது? திருமூர்த்திகளில் எவரைக் கடவுளாகக் கொண்டார்?

உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை நிறுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

"எந்த மூர்த்தி உலகங்களை உண்டாக்கி ரக்ஷித்து லயப் படுத்துகின்றதோ, இந்த முத்தொழிலையும் தன் விளை யாட்டாய் வைத்து நடிக்கின்ற அந்த ஏகமாய் நிற்கும் தத்துவம் எம் கடவுள், அதை வணங்குகிறேன்" என்றார். பாகவதத்தைச் சொன்ன சுகப்பிரம்மம் முதலில் தெய்வ வணக்கம் செய்வது ஞாபகத்துக்கு வருகிறது.

யத் கீர்த்தனம் யத் ஸ்மரணம் யத் ஈக்ஷணம்
யத் வந்தனம் யத் ஸ்ரவணம் யத் அர்ஹணம்
லோகஸ்ய ஸத்யோ விதுனோதி கல்மஷம், தஸ்மை
ஸுபத்ர ஸ்வரவஸே நமோநம.

"லோகத்தில் எந்த ஒரு தெய்வத்தை த்யானத்தாலும், கீர்த்தனத்தாலும், சேவையாலும், கேள்வியாலும், பூஜையாலும் மக்கள் பாபங்களை கழுவிக் கொள்கின்றார் களோ அந்த தெய்வத்தை யான் நமஸ்கரிக்கின்றேன்" என்றார்.

சுகப்பிரம்மத்தின் தெய்வ பாவம் கம்பர் தெய்வ பாவத்துடன் ஒத்து இருக்கின்றது. முத்தொழிலை இயற்றும் ஏக மூர்த்தியை, தொழிலைச் சுட்டி மும் மூர்த்தியாகச் சொல்லப்படினும் மூர்த்தியாய் நிற்கும் கடவுள் ஒன்றுதான் என்று ஆழ்வார்கள் உபதேசித் துள்ளார்கள்.

நம்மாழ்வார் சொல்லுவார்:—

பாருருவி நீரெரிகால் விசும்பாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமேயென நின்ற
விமையவர் தன் திருவுருவே றெண்ணும்போது
ஒருருவம் பொன்னுருவ மொன்று செந்தீ
ஒன்று மாகடலுருவ மொத்துநின்ற
மூவுருவம் கண்டபோதொன்றும் சோதி
முகிலுருவ மெம்மடிக ளுருவம்தானே.

ப்ரம்மா விஷ்ணு சிவன் என்ற மூவுருவும் கலந்து ஓர் உருவாய் கண்ட "ஹரி" தான் தன் தெய்வம் என்றார். ஸ்ரீ ஆதி சங்கரர் அபிப்பிராயமும் அதே. இந்த தெய் வமே ராமமூர்த்தியாக வந்து அவதாரமாயிற்று என்பது கம்பர் கருத்து. நம்மாழ்வார் தான் வழிபடும் கடவுளா கிய பரஞ்ஜோதியைக் காண மூன்று தத்துவங்கள் ஒன்று கூடின இடத்தில் நோக்கவேண்டும் என்றார்.

சிருஷ்டி என்பது ஒரு தத்வம். மின்சார சக்தி போன்றது! ஸ்திதி என்பது இரண்டாவது. லயம் அல் லது ஸம்ஹாரம் என்பது மூன்றாவது. இந்த மூன்று சக்தி யோட்டங்கள் கூடினால் உலகுக்கெல்லாம் ஒன்றாய் விளங்கும் ப்ரம்ம ஜோதி வெளிப்படும் என்றார்போலும். ஜடத்திலே பாஸிடிவ், நெகடிவ் (positive and negative) சக்திகள் சேர்ந்து எங்கும் மின்சார விளக்கு எரியக் கண்டவர்களுக்கு ஆத்ம ஞானமுறையிலே மூன்று

தத்துவங்கள் கூடிய இடத்தில் ப்ரம்ம ஜோதியின் உணர்ச்சி உண்டாகுமென்றால் அதை ஒருவாறு மனோ தர்மத்தால் அறிந்துகொள்ள முடியாததன்று.

ஆகவே ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன் இவர்களில் வேற்றுமைப்படாத மனோவெளியில் தெய்வம் புலப் படும். தற்கால நிலையில் வைஷ்ணவத்திலும், சைவத்தி லும் சிற்சிலர் பேத உணர்ச்சியைப் பாராட்டி தெய்வங் களுக்கும், பக்தர்களுக்கும் இடையே எண்ணவொண்ணுத சச்சரவுகளை மூட்டி விடுகின்றனர். விஷ்ணு வேறு என் றும், சிவன் வேறு என்றும் கருதும் பக்தர்களுக்கு விஷ்ணுவும் அகப்படான், சிவனும் அகப்படான் என் கிறார். கம்பர் ஒரு சந்தர்ப்பத்தில் பாடுகிறார் :

அரனதிகன் உலகளந்த வரியதிகன்
என்றுரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்றடை வரிய பரிசேபோல்

மத த்வேஷத்தைக் கண்டித்து நின்றார் கம்பர். தான் கொண்ட தெய்வமே ராமனாய் அவதரித்தான் என்று உபதேசிக்கின்றார். மும்மூர்த்தியாய் அவதரித்தார் என் கிறார்.

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர்
மும்மைத்தாய காலமும் கணக்கும் நீத்த
காரணன் கையில் லேந்திச் சூலமும் திகிரிச்சங்கும்
கரகமும் துறந்து தொல்லை, ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும் விட்டயோத்தி வந்தான்.

ஆதிப்பரம் பொருளே ராமனுக அவதாரம் எடுத்து உப தேசிக்க வந்தது என்பதுதான் கம்பர் கண்ட ராமர். இதே பாவத்தை பல இடங்களில் வற்புறுத்தியுமிருக் கிறார். கம்பர் ராமாயணத்தில் கண்ட ஒவ்வொரு வியக்தி

களுக்குள்ளும் தம் உணர்வால் புகுந்து அவரவர்கள் பேசும் பேச்சும், உணரும் உணர்ச்சியும், நடையும் தோன்றிய பாவமும் தானே நின்று அனுபூதியாய் கொண்டு பாடினதால் எந்த இடமும் உணர்ச்சி ததும்பும் இடமாய் இருப்பதை மக்கள் அறிந்திருப்பார்கள். ஆகவே வசிஷ்டராக இருந்து ராமன் யார் என்று உபதேசித்தது வெகு பொருத்தம்.

புறத்துநாம் ஒரு பொருள் இனி புகலுவதேனே
அறத்தின் மூர்த்திவந்து அவதரித்தான் என்பதல்லால்
பிறத்து யாவையும் காத்து அவை பின்னுறத் துடைக்கும்
திறத்து மூவரும் திருத்திய திருத்தும் அத்திறலோன்

தர்ம மூர்த்தியாகிய ஆதிப்பரம்பொருள் ராமனாக வந்து அவதரித்தார் என்றார் வசிஷ்டர். சுக்ரீவன் ராமனை தெரிந்து கொண்ட வகையைக் கம்பர் சித்திரிக்கின்றார். ப்ரம்மத்தின் லக்ஷணமாகவேதான் இருக்கின்றது.

ராமனைப் பார்த்து சுக்ரீவன் சொல்வதாவது :—

வையநீ வானுநீ மற்று நீ மலரின்மே
லய்யநீ யாழிநீ யாழிவாழ் (அ)மலநீ
செய்த தீவினைதெறும் தேவுநீ நாயினே
னுய்ய வந்துதவினாய் உலக முண்டுதவினாய்.

அடிபட்ட வாலியும் ஞானம் பெற்றபின் ராமனைத் தெரிந்து கொண்டு சொலலுவான் :

எவுகூர் வாளியால் எய்து நாயடியேன்
ஆவிபோம் வேளைவாய் அறிவுதந்தருளினாய்
மூவர்நீ முதல்வநீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ.

கூனியால் ஏவப்பட்டு சிறியதாய் கைகேயி சொல்லைக் கொண்டு காடும் கடலும் கடந்து தேவர்கள் கஷ்டத்தை

தீர்ப்பான் வேண்டி ராவணுதி அசுரர்களைக் கொன்ற ராமன் என்ற தத்வம் எது?

வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளனென்ப.

அதாவது எங்கும் நிறைந்த ஈசன்தான். விஷ்ணுவின் நாபிக் கமலத்தில் உறையும் ப்ரம்மாவும், முருகனை ஈன்ற பராசக்தியை தனது இடபாகத்தில் வைத்த சிவனும், மஹா விஷ்ணுவும் தனித்தனியாய் அகப்பட மாட்டார்கள். ஒன்ருய், கொத்தாய்த்தான் காணப்படுவார்கள். கல்லை அகல்யை என்ற பெண்ணுக உண்டாக்கி ரிஷிகளையும், யாகங்களையும் ரக்ஷித்து, அசுரர்களை ஸம்ஹரித்து முத்தொழிலையும் புரிந்து நிற்கும் ராமன் யார்? ஆதிபரம் பொருள்தானே!

முளரிமேல் வைகுவான் முருகற்றந்த வத்
தளிரியல் பாகத்தான் தடக்கையாழியான்
அளவியொன்ருவரே யன்றியையமில்
கிளவியாய் தனித்தனி கிடைப்பரோ துணை.

'ராம' என்ற நாமம் தாரக மந்திரம். அவதாரத்திற்கு முந்தியே எத்தனை நீண்டகாலமாய் பஜித்துவரும் நாமசப்தம் ஸ்ரீராமனுகக் கொண்டுவந்து அவதரித்துவிட்டது என்றும் சொல்லலாம்.

பரப்பிரம்மமாகக் கண்ட ராமனை பஜித்தால் நன்மைவரும். தீதெல்லாம் ஒழியும். மரணத்தை வென்றிருக்கலாம். விதித்த நாள் ஆய்விட்டது என்று நமன் அழைக்கில் நித்யசூரியனுய் விளங்கும் நாளும் நமக்குத்தரும். நன்மை, செல்வம், வாழ்நாள், ஆயுள் நாள் இவை யெல்லாம் கொடுக்கும் அந்த ராமநாமம். இந்த ராமர் அன்ருே கம்பர் கண்ட ராமர்!

அழகு

சூரபத்மனின் தசை அவனைக்கொன்ற முருகன் வேலின் கூர்மையில் ஏறிக்கொண்டிருக்கின்றதாம். வேலோ பராசக்தியின் கண்ணில் ஏறி நடனம் புரி கின்றதாம். பராசக்தியோ தன் ஸ்வயப்பிரகாசத்தோடு பரமசிவனுடைய ஒரு பாகத்தில் ஏறி ஜ்வலிக்கின்று ளாம். பரமசிவனோ ஓர் விடையின்மேல் ஏறி விளங்கு கின்றாராம். திருநீறானது பரமசிவன் மேல் ஏறி ஒளிர் கின்றதாம், திருநீற்றின் மேலே அழகு எனும் ஓர் தத்துவம் ஏறி விளையாடுகின்றதாம். ஆ! அழகுக்கு என்ன ஏற்றம் கற்பித்து விட்டார் ஸ்ரீ ஞானசம்பந்த மூர்த்தி. தேவாரம் பாடிய பெரியோர் 'அழகே' என்றழைப்பர் ஸர்வேஸ்வரனை. ஏற்றத்தின் ஏற்றம் அழகின் ஏற்றம். அழகே தெய்வம்! தெய்வம் அழகே! இதனாலல்லவோ மேல்நாட்டு ஞானிகள்கூட (**God is Beauty**) ஆண்டவன் அழகாய் இருக்கின்றார் என்று உபதேசித்துள்ளார்கள்.

ராமர்

தெய்வமே மானிட உருவமாய் தோன்றின், அழ கெனும் பண்பு எவ்வாறு காணப்படும் என்று சற்று உணரவேண்டும். ஸ்ரீ ராமாவதாரத்தின் வடிவை கம்பர் சித்திரிக்கின்றார். மேகம் போல் கறுத்த நிறம். நீலவண்ணமாய் இருப்பது அழகு குறைவு என்று நினைப்பது தவறு. இராமன் அழகை, சீதா கல்யாண சமயத்தில் விதேக தேசத்தில் எல்லோரும் பார்த்தார் களாம். கட்டழகனும். அழகான உறுப்புக்களால் அழகாக கட்டப்பட்ட அழகான சரீரமாம். "தோள் கண்டார் தோளே கண்டார்," "தொடுகழல் கமலம்

அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்,'' "தடக்கை கண்டாரு மஃதே.'' வாள்போலும் கூர்மையான பார்வையும், பிளந்து நோக்கும் ஆற்றலுமுடைய தாய் மார்கள் கூட வடிவினை முடியக் காணவில்லையாம்.

"வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்.'' அவரவர்கள் கண்ட உறுப்பின் அழகே அழகு என்று அதை புலம்பிக் கொண்டிருந்த மையால் "ஊழ்கொண்ட சமயத்தன்னான் உருவு கண்டாரை யொத்தார்'' என்றார் கம்பர். தெய்வம் (ப்ரம்மம்) எப்படி எங்கும் நிறைந்திருக்கின்றதோ, அப்படி அழகு எனும் தத்துவம் எங்கும் நிறைந்து நிற்கின்றது. எங்கு தெய்வம் காணப்படுகின்றதோ அங்கு அழகும் காணப்படும். அழகைக் காண ஆற்றல் வேண்டும். பல இடங்களில் அழகு மறைபொருளாய் விளங்கும். உருவத்தில் அருவாய் விளங்கும். செய்கை யில் சேவையாய் விளங்கும். குணத்தில் அன்பாய் விளங்கும். சொல்லில் இனிமையாய் விளங்கும். அறி வினில் தெளிவாய் இலங்கும். மனத்தில் செம்மையாய் இலங்கும். பண்ணில் இசையாய், பாடலின் பொருளாய் எங்கும் நிறைந்த சோபையாய் மானிட அறிவுக்குக் கரைகாணாத தத்துவமாய் ஒளிருவது அழகு. ஸ்ரீராமர், ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ முருகன் இவர்கள் அவதார காரணமாக அழகுப் போட்டி ஒன்று ஏற்பட்டு விட்ட தாம். இந்த தெய்வ ரூபங்கள் அழகுக்கு ஓர் முத்திரை யாகவே நின்றுவிட்டனவாம். கம்பர் சொல்வதைப் பாருங்கள். ராமன் யார்? அவர் லக்ஷணமும் எப்படியோ?

தேறினன் அமரர்க்கெல்லாம் தேவராம் தேவரன்றே!
மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடராகி மன்னோ
வாறு கொள் சடிலத்தானும் அயனும் என்றிவர்களாதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்றதன்றே!

தெய்வம் அவதாரம் செய்ததால், மானிட அழகு எல்லா உலக அழகினையும் வென்றது. ப்ரம்மத்தின் அழகே ஓர் உருவாய்த்திரண்டு, மானிட ரூபமாய் அவதரித்த அந்த ராமனைக் காணாத கண்கள் கண்களல்ல மரங்களே யென்றும், கண்ட கண்ணுடையார்களே, கண்ணுள்ளார் என்றும் அநுமான் கூறியதை மனத்தில் வைப்போம். வெளிக் கண்ணால் பார்க்க முடியாத ராமனை இன்றும் எப்போதும் அகக் கண்ணால் பார்க்கலாம்.

மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளார் இயலுளார் இசையுளார் திசையுளார்
கண்ணுளார் ஆயினார் பகையுளார் கழிநெடும்
புண்ணுளார் ஆருயிர்க்கமுதே போலுளார்.

உருவம் மாத்திரமா அழகு! நடை, உடை, பாவனை, செயல், தியாகம், நட்பு, கோபம், குற்றம் எல்லாம் அழகாய் அமர்ந்ததை உணரலாம்.

மானிடத்தை தெய்வீகத்தினின்றும் பிரித்து, வரம்புகள் கட்டி ராமனை மானிடமா? தெய்வமா? என்று கேள்வி ஆராய்ச்சிகள் நடத்தி துணிபுகளை தீர்மானிக்கின்றார்கள் சிலர். மானிடம் தெய்வ லக்ஷணங்களை அடையலாம். "நானும் நீயும் ஒன்றானால் நவிலத் தகுமோ பேரின்பம்!" தெய்வமும் மானிடனாய் அவதரிக்கக் கண்டோம். மானிடமும் தெய்வத்தன்மையும், எங்கும் நிறைந்த ஒரு தத்துவத்தின் இரண்டு கோடிகள் (Poles) எனக்கருதல் வேண்டும்.

இவ்விரண்டையும் பிணைக்கும் அன்பு மானிடத்தின் இன்றியமையாத செல்வம். அழியாதது; குன்றாதது. அதைக் கொண்டு மானிடன் தெய்வத்தின் அழகையெலாம் பெறறிடலாம். அவதாரத்தின் ஒரு கருத்து இதை உபதேசிப்பது அன்றோ?

நமது மனம் அழகானால் உலகெலாம் அழகாகும். அழகற்ற உலகம் அருளற்ற நரகம். அன்பற்ற பாலை வனத்தை நந்தவனமாக்கி, ப்ருந்தாவனமாக்கி, கோகுலத்தில் ஆயர்ப்பாடி போலும், பாலும் தேனும் பொங்கும் வான நாடாகச் செய்ய, அன்பு செயல் வேண்டும். அழகனைத் தொழல் வேண்டும்.

கண்ணன்

மற்றொரு அழகன் கண்ணன். அவன் அழகுக்கு ஒரு முத்திரை. "சௌந்தர்ய முத்ராமணி." கையில் குழல். வானின்றிழிந்து வந்த குறிகாட்டும் தன் வண்ணம் நீலம். அன்பெனும் பால் வளர்க்க வந்த கருத்தின் படியே ஆயர்ப்பாடி வளர்ப்புத்தலம்.

மண்டலம் நிறைந்த திங்கள் வதனமும் கமலக்கண்ணும்
குண்டலம் சுடரும் காதும் குறுநகைப் பவளவாயும்
தண்டுழாய் அலங்கல் மார்பும் தடக்கையோரிரண்டுமாகக்
கண்டனர் மறையுங்காணக் கரியவன் உருவமம்மா!

அழகிய உருவம். அழகிய குழல். அழகிய நடனம். குழலோசையால் நற்பசுக்களை (மக்களை) அழைத்துக் காத்து, நடனத்தால் காலத்தை வென்றளந்து, தீயவை காய்த்து, அன்பர்களுக்காளான அழகே! சரண் சரண்!

முருகன்

மற்றுமொரு அழகன் கண்ணன் மருகன் முருகன்.

கமல மடமங்கை லக்ஷ்மி வதனத்தழகு காண்பாள். முருகன் முகத்தழகை போற்றுகின்றாளாம். ஏனோ?

அலங்கார முடிக்கிரண திரண்டாறு முகத்தழகிற்கு
அசைந்து ஆடும் குழை கவசத்திரள் தோளும்
அலந்தாம மணித்திரளைப் புரண்டாட நிரைத்தகரத்
தணிந்தாழி வனை கடக சுடர் வேலும்

சிலம்போடு மணிச்சுருதிச் சலங்கோசை மிகுத்ததிரச்
சிவந்தேறி மணத்தமலர்ப் புனைபாதம்
திமிந்தோதி திமித்திமிதித் தனத்தான தனத்தனன
தினந்தோறும் நடிப்பதுமற் புகல்வேனே!

என்பர் அருணகிரியார் திருப்புகழில். ஆறுமுகமாம். ஒவ்வொன்றும் ஒரு பூர்ணசந்திரனும்! ஞான சொரூப மாய் விளங்குகின்றன. மேலே மணிகள் இழைத்த கிரீடங்களாம்! கையில் கொத்து கொத்தாக மணித் திரள்களால் கட்டப்பட்ட மாலைகளின் அலங்காரம். வடிவேல் ஏந்தியகரம். வேதமொழி பேசும் சலங்கை கள். உலகுக்கு ரக்ஷகமாய் நிற்கும் தாள்கள். திரு மேனி சுடர் போலும் "உடையழகு முதுஞான சொரூபகிரியிடமேவும் முகமாறும்." தேவர்கையால் அலங்கரிக்கப்பட்ட மாலைகளில் வண்டுகள் 'ஹ்ரீம் ஹ்ரீ' மென்று சப்திக்கின்ற அழகு. பவளம் போல் உதடு கள். மழலைச் சொல் மழை பொழியும் செவ்வாய். வேதமே வாக்கானதால், வேத வாசனை அடிக்கின்ற தாம்! "துகிரிதழின் மொழிவேத மணம் வீச" என்றார் அருணகிரி. செவ்வான நடன ஸ்வரூபமாய் விளங்கும் முருகன் சிவந்த கிரணங்களால் சுற்றிலும் பிரகாசத் தைப் பொழிகின்றானும். ஓங்காரப் பொருள் தானென உபதேசிப்பது போலும்! ஆடிய மயில் மேல் ஆரோகண மாம். இந்த ரூப அழகு, ஒலியழகு, வண்ண அழகு, பேச்சழகு, மண அழகு, அன்பழகு, அருளழகு இவற் றைக்கண்ட தேவர்கள் கரைகின்றார்களாம்.

கமலமடமங்கை வதனத்தழகுகாண்பளக்
    கரியமுகில் வண்ணனுஞ் செங்
கண்ணழகு காண்பன் வளர்கலை வாணி சொல்லழகு
    காண்பள் முக்கண் தாதையும்
விமலமுறு சொற்பொருளினழகு காண்பன் விதி
    வியன் கரத்தழகு காண்பான்
வீறு தோளழகிந்திராணி காண்பாளும் பர்
    வேந்து வேலழகு காண்பா

ணிமல மணவடியரடியழகு காண்பார் கவுரி
நின்று பின்னழகு காண்பா
ணின்ஞெத்த வாதித்தன் வடிவழகு காண்பஞெரு
நீயுமவரொடு சூழுமியே
யமல மென்னகையழகு காணலாஞ்சமயமீ
தம்புலீ யாடவாவே
யம்புய தடங்குலவு கம்பைவளர் கந்தனுட
னம்புலி யாடவாவே (பிள்ளைத் தமிழ்)

அழகே முருகஞய் அவதரித்த நேர்மையை அருணகிரி வியந்துரைப்பார்:—

எழுதரிய அறுமுகமும் மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்த செஞ்சுட்டிக் கலன்களுந்துங்க நீள் பன்
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்னக் குதம்பையும் பத்மக் கரங்களுஞ் செம்பொனூலும்
மொழிபுகழு முடைமணியு மரைவடமும் மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சித்ரச்சிகண்டியுஞ் செங்கைவேலும்
முழுதுமழகிய குமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன் பெறுஞ் சற்புத்ர வும்பர்தந் தம்பிரானே!

ஆகவே தெய்வ உருவங்கள் எல்லாம் ஒவ்வொருவகை யான அழகின் ரூபங்கள். அன்பர் உள்ளத்தில் தித்திக்கும் உணர்ச்சியில் பாய்ந்து உருக்கும் தன்மை உடையது. அழகே உயிர், அழகே உடல், அழகே உணர்ச்சி, அழகே உலகம், அழகே தெய்வம் இவை யறியாது, தன்னைத் துன்புறுத்தி பிறரையும் துன்புறுத் தப்படும் மானிட அறிவின்மையே அழகிலா தொழிந் தது. அழகின் அறிவால் அறிவின்மை ஒழியும். கந்தப் புராண ஆசிரியர் ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் முருகன் கழலழகை வர்ணிக்கின்ருர்.

ஆயிரங் கோடிகாமர் அழகெலாம் திரண்டு ஒன்ருகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில்
தூயநல் எழிக்காற்ருெதென்றிடில் இணைய தொல்லோன்
மாயிரு வடிவிற்கெல்லாம் உவமை யார் வகுக்க வல்லார்?

சூழ் நிலை

பஞ்ச பூதங்களால் ஏற்பட்டது பிரபஞ்சம். பஞ்ச பூதங்களால் ஏற்பட்டது மானிட சரீரம். ஸ்ருஷ்டியை ஒட்டியும் ஸ்ருஷ்டியினால் கட்டுப்படாமல் நிற்பதும் கடவுள் என்ற பரதத்வம். இந்த தத்வம் உலகுக்கு ஆதாரமாய் நின்று உலக சம்பவங்களால் கட்டுப் படாமல் ஆனந்தமயமாய் இருக்கின்றதாம். இதன் இயல்பை போதிக்கின்றார் சித்தர்.

நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓர்இலை
நீரினோடு கூடிநின்று நீரிலாதவாறு போல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்பு கண்டறிவிரேல்.

தாமரை இலையைத் தாங்கிநிற்கும் நீர் தாமரைக்கு ஆதாரத்தைக் கொடுத்து (கீழ்பாகத்தில்) செழிக்கச் செய்யினும் தாமரை இலையின் பச்சென்ற மேல் பக்கத் தில் நீர் ஒட்டுவதில்லை, அதுபோல பாரினிலே ஒட்டா மல் இருக்கும் ஒரு தத்துவம் அதனுடன் எப்பொழுதும் கூடியே நிற்குமாம். அந்த பரதத்துவத்தை அகற்ற முடியாது. எங்கும் பரந்து நிற்கின்றது.

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக்கண்ட வொளியாகி
நன்றாகித் தீதாகி நாசத்தோடு உற்பத்தி நண்ணுதாகி
இன்றாகி நாளையுமாகி மேலுமான எந்தையே எம்மானே வென்று
கன்றாகிக் கதறினோர்க்குச் சேதாவாகிக் கடிதினில் வந்து
அருள் கூறுமென் கருணை விண்ணே !

என்றார் தாயுமானவர்.

வினை, விதி, இந்திரியங்கள் எல்லாம் இத்தத்துவத்திற்கு உட்பட்டனவே. ஆகவே சூழ்நிலையை அறிந்து இடம், பொருள், ஏவல் தெரிந்து பண்புடன் ஒழுகக் கருதும் மேன்மக்கள் முக்கியமாகத் தன்னை சூழ்ந்தும். ஊடுருவிப்பரவியும் நிற்கும் இந்தத் தத்துவத்தை மறக்கமாட்டார்கள்.

இந்தத் தத்துவத்தின் இயல்பைத்தான் குறித்துப் பாடினார். சூக்ஷுமமாய் இருக்கும் தத்துவத்தின் சில இயல்புகள் நமக்கு பெரியோர்களால் உபதேசிக்கப் பெற்றோம். அந்தத் தத்துவத்தை நாடி நிற்கும் மனோ நிலையில்தான் ஆனந்தம் பிறக்கின்றது. அன்பு பிறக்கின்றது. பஞ்சபூதங்களால் ஆன பிரபஞ்ச வாழ்க்கையின் பொலிவு விளைகின்றது. வினையின் துன்பம் குன்று கின்றது. விதியின வலியும் அழிகின்றது. அறிவு பெருக்கெடுக்கின்றது, மனோலயம் அவதரிக்கின்றது.

மன் மனத்துள்ளே மகிழ்ந்திருப்போர்க்கு
மன் மனத்துள்ளே மனோலயம் ஆகுமே!

நமது சூழ்நிலையின் போக்கு ஈசன் போக்கு. ஈசனுடன் நம் மனது மூலயமாய் சம்பந்தப்படலாம், சம்பந்தம் ஏற்பட்டு விட்டால் வாழ்க்கையில் வெற்றிதான்; மகிழ்ச்சிதான். சம்பந்தப்படாமல் பிரதிபந்தப்பட்டு விட்டால், துயரம் வேறுண்டோ? நரகம்தான். கைலாசக் காக்ஷியைக் கண்டு, வைகுண்டத்தில் உண்டு உடுத்து, பாரினிலே விளையாடவந்த மானிடன் மனோ துக்கத்தால் வருந்துவது சூழ்நிலை அறியாத அஞ்ஞானமே.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்". நாடக அரங்கத்திலேறி கணவனைப் பிரிந்த தலைவி அலறுவது போல்தான் அலறவேண்டும், அலறவேண்டுமாயின். நாடகச் செயலாளர்களாய் விளங்குபவர்கள், நாடகச் சூழ்நிலையை மறந்து, சுகதுக்கங்களைப் பாராட்டி

விட்டால் நாடகமும் நடக்காது. சுகமும் அழிவடையும். மானிட சரீரத்தில் தானாய் நின்ற தலைவன் சூழ்நிலையைப் பார்த்தால், அறிஞனாய் ஒளிரும் பரம்பொருள் உள்ளிருக்க, மாயையால் சூழப்பட்டு, மாயை பெற்ற மனம் ஐம்பொறிகளால் விஷயசுகத்தை உண்டு, ஆசா பாசக் காமக்ரோத அறுபகைகளை ஏற்று, மனமும் தனது பகைவனாக இருப்பது, முதல் சூழ்நிலை. மனம் அறுபகை செற்று, ஐம்பொறி யடங்கி பரமனுடன் லயப்பட்டால், ஆனந்த அனுபூதிக்கு இன்றியமையாத சூழ்நிலையைப் பெற்றுவிடலாம்.

வில்லிப்புத்தூரார் சொல்வது நோக்குக:

மாயை என்றொருத்தி தன்பால் மனமெனும் மைந்தன் [தோன்றி
தூய நல்லறிவன் றன்னை தோற்றமின்றாக்கி வைத்தான்
தாயொடு தந்தை மக்கள் தாரம் என்று இவர்பால்வைத்த
நேயமும் அவன்தன்னாலே நிகழ்வதோர் நிகழ்வுகண்டாய்.
குயின்ற ஐம்பொறிவாய் நின்று குறித்த ஐம்பொருளும் தானே
அயின்று முக்குணங்களோடும் அறுவகைப் படைகளோடும்
பயின்று அரசாளும் அந்த மனமெனும் பகைவன் ஆங்கே
துயின்றபோது ஒளித்துநின்ற தோன்றலும் தோன்றும் [கண்டாய்
அந்த நல்லறிவன் றன்னை அறிந்தவர் அறிஞர் ஆவார்.

தாயுமானவரும் நமது சூழ்நிலையைத் தெளிய விளம்பியுள்ளார்.

ஔவிய மிருக்க நானென்கின்ற வாணவ
மடைந்திட்டிருக்க லோபம்
அருளின்மை கூடக் கலந்துள்ளிருக்க
மேலாசாபிசாச முதலாம்
வெவ்விய குணம் பல விருக்கும்...

என்றார்.

மானிடன் தன் சூழ்நிலையை தானே அன்பின் ஆற்றலால் மாற்றிக் கொள்ளலாம். தெய்வம் உள்ளிருக்க, அத்தெய்வத்தை வெளியே வரும்படி கூப்பிட்

டால் அது உதவி புரியுமாம். சூழ்நிலை ஆனந்த சூழ்நிலையாய் ஆகிவிடுமாம்.

மனம்போல மாங்கல்யம் என்று எல்லோரும் கேள்விப் பட்டிருப்பார்கள். அதன்பொருள் மனம் எவ்வாறோ அவ்வாறு ஓர் சுற்றத்தை அது சம்பாதித்துக் கொள்கின்றது. இது ஆண்டவன் ஸ்ருஷ்டியின்கண் காணப்படும் ஓர் இலக்கணம். ராமாயணத்தில் சூழ்நிலைச் சித்திரம் மிகவும் அற்புதம். உதாரணமாக தாடகா வனத்தை வர்ணிக்கின்றார். தாடகையின் மனம்போல் அவளிருக்கும் வனம், அன்பற்ற மனம், நீர் அற்ற பாலை வனம். எங்கும் வரட்சி. பண்பு என்னும் பொருளற்றது. மரம், நிழல், சோலை எல்லாம் அற்ற இடம். நுண்ணிய மண் தூளிகளை எழுப்பும் காற்றே எல்லா ஜீவன்களையும் மரிக்கச்செய்யும்.

சூழ்நிலையும் மனமும் அந்நியோந்நிய சம்பந்தமாய் கட்டப்பட்டிருப்பதால் சூழ்நிலையால் மனதைத் திருத்த லாம். மனத்தால் சூழ்நிலையையும் மாற்றலாம். ஆகவே மானிடன், தன் முயற்சியால் தன் சூழ்நிலையை, அன்பு, பண்பு, அறிவு, பொறுமை, ஜீவகாருண்யம், பெரியோர் சங்கம் இவ்வகையில் ஏற்படுத்திக் கொண்டுவிட்டால் நன் மனமும் பூர்ணமாய் பண்பட்டு, ஈசன் அருளுக்கும், உயர்ந்த கதிக்கும் பாத்திரமாய் விடுகின்றான். இதனால் தான் சத்சங்கம் வேண்டுமென்பது. சாதுக்கள் மனங்க ளால், நம் மனம் சூழப்பெற்றால், அந்த சூழ்நிலையில் மனத்தின் தோஷங்கள் அற்றுப்போய் விடுமன்றோ? குணங்களும், அதிகரிக்குமல்லவா? முருகனை "வாவா" வென்று அழைக்கின்றார் அருணகிரியார். வரமும் கேட்கின்றார். என்ன வரம்? "ஞான நெஞ்சினர் பாலிணங்கிட கூர்மைதந்தினி ஆளவந்து இனி அருள் புரிவாய்" என்றார். நல்லோரிணக்கம்போல் முக்திக்குப் பாத்திரமாயுள்ள சூழ்நிலை கிடையாது. என்னவரம் கேட்கின்றார். ஏழுவகை முத்துமாலை யணிந்து "சுடர்

பச்சை மாவின் அருளிற் பெண்ணோடு அடிமைக் குழாமோடு அருள்வாயே.''

அடையவேண்டிய குறியைப் பொறுத்திருக்கின்றது நாம் இயற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை, சொற்பமட்டுந்தான் நாம், நமது சூழ்நிலையைத் தீர்மானித்துக்கொள்ள முடியும். பிரும்மசங்கல்பத்தினுல் ஏற்படக்கூடிய சூழ்நிலையை சிறிய மனிதன் தடுக்க முடியாது. ஆயினும், பிரும்ம சங்கல்பத்தின் ஓட்டத்திற்கேற்ப, மானிட சங்கல்பமும் நின்று விட்டால் மானிடன் நான், எனது என்கின்ற **பா**வத்தை விட்டு விடலாகும். இந்தத் தத்துவத்தைத்தான் பண்டை காலப்பாட்டு வெளிப்படுத்துகிறது.

இட்டமுட னென்றலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனும் செத்துவிட்டானே—முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

எல்லாம் ஈசன் செயல் என்று தன் விருப்பத்தையும் இச்சையையும், சங்கல்பத்தையும், முயற்சியையும் விட்டு, ஈசன் தனக்கு எந்த நிலையில், எந்த சுற்றத்தில் எந்தக் கடமைகளை விதிக்கின்றானோ, அந்தக் கடமைகளை பற்றற்று **பூரண முயற்சியுடன்** பலனை எதிர்பார்க்காமல் செய்து நிற்பவன் அறிஞன், ஞானி, யோக தத்பரன்.

மனம் அடக்கப்பெற்ற சூழ்நிலையே மோட்ச சாதனம்.

அலையும் மனத்தை அகத்தடக்கும்
அவனே சரியைக் கடந்தோனும்
அலையும் மனத்தை அகத்தடக்கும்
அவனே கிரியை முடித்தோனும்
அலையும் மனத்தை அகத்தடக்கும்
அவனே யோகதத்பரனும்,
அலையும் மனத்தை அகத்தடக்கும்
அவனே ஞானி அதிசூரன்.

கல்லும் சொல்லும்

சொல்லின் வன்மையால் கல்லும் கரைந்துவிடும். சொல்லின் திண்மையால் சொல்லே கல்லாய்ப் பாய்ந்து வினைகளை விரட்டி துணை பயந்திடும். சொல்லின் தீமையால் சொல்லே கல்போன்ற தீமை விளைத்திடும். சொல்லினில் ஜோதி காண்பார் கல்லிலும் ஜோதி காண்பார். நமது புராணங்களில் கூறிய சரித்திரங்கள் இவைகளுக்குச் சான்றாகும்.

வள்ளிமாதா சிருஷ்டி என்ற தினைப்புனத்து, இதய ஸ்தானமாய் அறியப்பட்ட பரண்மிசை ஏறி, ஆசாபாசமான பறவைகள் வந்து ஜீவராசிகளாம் தினைகளை கொத்திக் கடியாது காப்பாற்ற வேண்டுமென்ற கருணையால் ஆ! ஓலம்! ஆலோலம் என்று கூவி புனம் காத்தப் பெருமை கந்தப்புராணம் கூறும். பிண்டத்தில் உதவுவார் அண்டத்திற்கு உதவுவார் என்று உணர்ந்தாள். கவண் ஒன்று கையேந்தி அதில் கல் வைத்து பறவைகளை விரட்டினாள். ஓங்காரமெனும் கவண்தான் அவள் கொண்ட கவண். 'முருகா' எனும் திவ்யநாமமே அவள் உபயோகித்த கல். முருகா என்னும் நாமத்தை கல்லாகக் கருதி ஓங்காரம் எனும் கவணில் ஏற்றி ஆசாபாசக் காமக் குரோதங்களாகிய பக்ஷி ஜாதிகளை விரட்டி நின்றாள் வள்ளி. காப்பதற்கு சொல்லும் கல்லாய் விட்டது. கல்லை வைத்தடித்தால் விரட்டப்படாத வெவ்வினைகள் எல்லாம் சொல்லைவைத்தடித்தால் சிதறிப்போய் விடும். இதனாலல்லவோ மொழிக்குத் துணை முருகா எனும் நாமம் என்று அருணகிரி பாடியதும்! அஹிம்ஸையின் உயிர்நிலை கல்லைக் கரைத்திடும்.

சொல். நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்திடவே யன்றோ அருணகிரி அனுபூதி பாடியதும்! சிவாயநம வென்று சொல்லிக் கொண்டிருந்தாராம் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான். அந்த சொல்லினில் உறைந்த ஜோதியாய் விளங்கும் சிவபிரான் உதயமாகி, மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கி, தன் கருணை வெள்ளத்தழுத்தி வினைகடிந்தானும். பஞ்சாக்ஷரம் எனும் சொல்லின் வன்மையும், திண்மையும் போற்றினர். கல்லும் கனி யானது அதாவது பழமானது, ஓர் பழஞ் சொல்லின் வன்மைதானே. 'சிவப்பழம்' என்று சொல்வது உலக இயல்பு. சொல் தூய்மையுள்ளதானல், ஜோதியுடைய தானல், நன்மையும் இனிமையும் பூண்டதானல், சொல்லே பழமன்றோ. பழத்தை நாவில் இட்டால் ருசிப்பது போல் சொல்லை நாவிலிட்டால் சில சொற் கள் தித்திக்குமானல் அச்சொற்களும் பழம்தானே. பழஞ்சொல் ஒன்று கல்லை கனியாக்கியதென்றல், கல் ருசிக்காத காய் என்றேதான் கொள்ளவேண்டும். 'சொல்லச் சொல்ல தித்திக்குமே, அப்பா உந்தன் நாம ரஸம்', என்றார் முருகதாஸர். அனுபூதியில் நிறைந்து கிடக்கும் சொல்லெல்லாம் பழஞ் சொற்கள் தான். கல்லான மனதை நெகிழ வைக்கும் சொற்கள். சிவ ரஸம் ஒழுகும் தேனெத்த நிறைச்சொற்கள். சொல் லால் கல்லான மனமும் கனியாய்விடும். ஏன்! 'ராமா' என்று ஓதிக்கொண்டிருந்த அகல்யையின் மேன்மை யென்னே! சொல்லால் கல் கனிமாத்திரமல்ல, கன்னியு மாய் மாறிற்றன்றோ!

முன்னெருகால் நாரதபகவான் கையில் பிடித்த வீணையுடன் திடீரென்று ஒரு காட்டில் இறங்கிவிட் டார். ஏன்? அருமையான கானம் காதில் விழுந்தது. தொண்டுகிழமாய் நின்ற ஸ்ரீ அஞ்சநேயமூர்த்தி ராம பஜனம் செய்தாராம். அந்த இசைச்சொல் நாரதரை இழுத்துவிட்டது. வீணையை அருகிலிருந்த ஒரு பாறை

மேல் வைத்துவிட்டு ஸ்ரீ அஞ்சநேயகானம் கேட்டுக் கொண்டே இருந்தார். அந்த கற்பாறை நெகிழ்ந்து வீணை அதற்குள் இறங்கிவிட்டது. ஆஞ்சநேயர் பஜனம் முடிந்ததும் ஸ்ரீ நாரதப் பிரம்மம் புறப்பட்டார். வீணையை எடுக்க முடியவில்லை. கற்பாறை வீணையை பற்றிக்கொண்டது. கற்பாறை நெகிழ்ந்த காலத்தில் அதனுள் அகப்பட்டு கொண்ட வீணை, கற்பாறை திணிவு பட்டவுடன் வீணையையும் பற்றிக் கொண்டதென்று உணர்ந்தார். மறுபடியும் பாறையை நெகிழச் செய்ய, ஸ்ரீ நாரதர் பாடினார். வீணையை மீட்கவேணுமென்ற குறியைக் கொண்டதனால் நிஷ்காமமின்றி செய்த நாரத பஜனையில் பாறை இளகவில்லை. மறுபடியும் ஆஞ்சநேயர் ராமபஜனை செய்து கொண்டிருக்கையில் பாறையும் இளகியது. நாரதரும் வீணையை மீட்டுக்கொண்டார் என்பது புராணம். "குறியைக் குறியாது குறித்து" பஜனை செய்தால் ஏன் பாறையும் இளகாது? மானிட நெஞ்சமாகிய கற்பாறைகள் உருகி அன்பு வெள்ள மெடுக்க வேண்டில், ஆற்றல் பொருந்திய சொற்களால்தான் முடியும். அன்பும், பக்தியும், குறியற்ற பஜனையும், அறிவுற்ற பண்பும், வேற்றுமையெனும் திரிபற்ற உள்ளமும் தேக்கி சுகம்பெற வேண்டுவீரேல் ஆண்டவன் நாமத்தை ஓதுவீர்.



மருவும் மலரும்

ஒரு வித்தை விதைத்தேன்.
வித்துக்குள் இருப்பதை ஏதென்று அறியேன்.
என்ன வித்து என்றும் தெரியாது.
எவரெவரையோ கேட்டுப் பார்த்தேன்.
அறிந்து மொழிபவர் யாருமில்லை.
பூமாதேவியை நோக்கி "நீதான் சொல்லவேண்டு"
மென்றேன்.
அதை வாங்கிக்கொண்டு தன்னகத்தில் வைத்தாள்.
"பொறுமையாய் பார் தெரியும்" என்றாள்.
அன்பெனும் நீர் பாய்ச்சினாள்.
வித்திலிருந்து ஒன்று வெளியாச்சு.
அதை முளை யென்றார்கள்.
முளை செடியாய் வளர்ந்தது.
என்ன அருமையான தளிர்கள்!
இளமை யென்றால் தளிரைத்தான் சொல்ல
வேண்டும்.
அதற்கு ஓர் வாசனை, அமர்ந்து அடங்கிய மணந்
தான்.
செடி வளர்ந்தது.
விட்ட தளிர்கள் முற்றின.
மேலே புதுத்தளிர்கள் முற்றின-
பிறகு ஒரு மொட்டுவிட்டது. பல மொட்டுகள்
காணப்பட்டன.
கல்போன்ற திணிபு.
சூரிய கிரணங்கள் மொட்டின் பொக்கிஷங்களை
கொள்ளையடிக்க சுற்றியே திரிந்தன.
கடைசியாக மொட்டின் பூட்டு அவிழ்ந்தது. மலர்ந்
தது.

அம்மலரில் கண்ட பொக்கிஷம்தான் என்னே!
அருந்தேன் துளிகள் உள்ளே ஆழ்ந்து கிடக்க
மலரின் மணம் எங்கும் பரவியது.

மணவாளன் வந்தான்.
மணத்தின் மோப்பந் தெரிந்து தேடியே வந்தான்
—வண்டு!

மலர்ந்த மலரின் தேனை உண்டான்.
மலரின் மணம் யாவர்க்கும்.
மலரின் தேனோ மணவாளனுக்கு மாத்திரந்தான்.
மணவாளன் பறந்தோடிப் போய்விட்டான்.

போகுங்கால் எந்த வித்து விகஸித்து, மணத்தையும், தேனையும், சோபிதத்தையும் ஈன்றதோ அம்மாதிரி அநேக வித்துக்கள் அடங்கிய பழங்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டான்,

மணவாளன் வந்த சந்தோஷம் அரை நிமிஷந்தான்.
தேன் குடித்த மணவாளன் ஸ்திரமான அன்பற்ற கள்வனாய், கள்ளுண்டு, கண் மறைந்தான்,

ஐயோ பாவம்!

மணவாளனை இழந்த மலர் துக்கத்தால் வாடியது. வதங்கியது.

வாடிய மலரை நோக்கி தாயாம் செடி தேருதல் சொல்வாள்.

"வந்த மணவாளன், அவலனாய், கள்வனாய் ஓடிவிட்டானென்று வருந்தாதே. அவன் விட்டுப்போன காய்களைக் கனியாக்கிக் கொடுக்கும் ஆற்றல் எனக்குண்டு" என்றாள்.

மலரோ துக்கம் தாங்காது நிலைகுலைந்தது போலும்!
மலர் மாண்டது.

மலர் மாண்டும் மலரின் துக்கம் மாளவில்லை,
மலரின் துக்கம் கல்போன்ற, ருசியற்ற, புளித்த
காய்களாகக் கட்டி தட்டிவிட்டது.

புளித்தகாய் பழுத்தது.
அந்தப்பழம் ருசியும் ஈன்றது. அது என்ன ருசி?

புளிப்பின் மாற்றந்தானே! அந்த ருசியும் அற்
றது. பிறகு வித்துக்களில் அமர்ந்தது. எது?

மலரின் துக்கம்.
மானிட வாழ்க்கையின் பொருளை, தத்துவத்தை
ஒரு செடியினின்று அறிந்துகொள்ளலாம்.

அன்பனைவிட்டு மற்றோர் அவலனை நம்பி
பின்பு துன்புறுவார் துயரினுக்கும் முடிவுண்டோ
நம்பனைவிட்டு பொல்லா உலகினை நம்பினால்
துன்புறுத்தும் விதியின் வித்துகளே யன்றோ
அடையும் பலன்!

வாழ்க்கையின் பொலிவினாலன்றி மானிட மேன்
மையையும், சிறுமையையும் அறிதலாகாது.

ஒரு வித்தின் விமர்சனமன்றோ இந்த வாழ்க்கை. "வாழ்க்கையின் பயனறிந்தால் பதினாலுலகும் நீங்காமல் நீங்கி, நிறைவாய் நிறைந்து, நிறையுறுவாய் ஆங்காரமானவர்க் கெட்டாத கனிவந்தமர்ந்திடுமே" யென்றார். விதியைப் பரப்பும் வண்டுகளை வாழ்க்கையில் சேர்க்காதே என்பார்கள். ஆசாபாசக் காம, குரோதங்கள் அவையாகும்.

மலர்ந்த மனதில் உரையும் அன்பெனும் தேனை மலமற்ற முருகனிடத்தில் கொடுத்துவிட்டால் விதியற்ற வாழ்வும், கதியேயான கனி வந்து அமர்ந்திடுமாம்.

பழனியப்பன் என்ற பழத்திற்கு கொட்டை கிடையாது. வித்தும் விரையும் அற்றது.

ஏன் ?

பிரம்மமாம் வித்திலே ஞானமாம் முளைவிட்டு வேதமாம் சாகைப் பரப்பி காயறியாச் சோலையில் மோனமாம் பழமாய் அன்றோ திகழ்கின்றான் அம் முருகன். அவனிடம் மனதைச் சேர்த்துவிட்டால் நண்பனும் மணவாளனை அடைந்ததாகும். சேர்க்காவிடில் யாரைச் சார்ந்தாலும் வம்பெனும் வண்டு துன்புறுத்தியே நிற்கும்.

முருகன், பழமும் வண்டும் ஒன்றாய் நின்ற தத்துவமன்றோ !

முருகன் எனும் வண்டு இதய கமலத்தில் புகுந்தானெனில் அதைவிட்டு பின்பு அகலான். என்றும் அகலாத மணவாளன். மற்ற வண்டுகள் வராமல் காப்பாற்றிவிட்டால் ஜீவன் தன்னுள்ளிருக்கும் தேனை களவினால் இழக்கமாட்டான். தானே உண்ணலாம். கதியைத் தாண்டி ஆனந்த இன்பமாய் வாழ்க்கையில் ஜனன, மரணமற்றிருக்கலாம். பிரகிருதி மார்க்கத்தின் முடிவு வித்து. அடுத்த பிறவிக்கு வித்தாகியது அந்த முடிவு. ஞானமார்க்கம், பக்திமார்க்கம், இவைகளின் முடிவு கனிதான். வித்தில்லாத கனி! பிறப்பில்லாத கனி; அழியாக் கனி; நிலையெனும் ஞானரஸமான நித்யத்வம்.

காலம் கடந்த வாழ்வு, முருக ரஸம் ஆனந்த மயம் ஜகத்.

கனகா

கனகா என்பது என்னுள்ளத்திற்கிசைந்த ஒரு தோழி. என்னை அணைத்து, அன்பு பாராட்டும் தாய். வெப்பத்தால் வேகும் மக்களுக்கு நிழல் அளிக்கும் ஒரு கற்பகத்தரு. புன்சிரிப்பால் முகமலர்ந்தால், இதழ் பழுத்து, மணம் பரப்பி, இன்பம் எழுப்பும் பண்புடைத்தது. இரண்டு மெத்தை வைத்து பெரிய வீடு கட்டி உயர்ந்தாலும், அதனினும் உயர்ந்தது எங்கள் கனகா. பருத்த ஆக்கம் உடையதெனினும் வயிரம் சிறிதேனும் பாயாத உள்ளம். தளிர்போன்ற விரல்கள். நீண்ட அழகிய கைகள். இவை யசைந்தால், மெல்லிய பூங்காற்று, இனிமையாய் வீசும். மூங்கில் வளைவினையும் ஏய்க்கும் தோள்கள். காகம் வந்து கிளையில் ஊர்ந்து, வைகறையில் தொண்டரை எழுப்புமிடம். பிணத்தையுகக்கும் காகம் கனகாவை அண்டியது கண்டு வாசமலர்க்கோதும் குயில்கள் வெகுண்டு காகத்தை விரட்டி தம்மிடமாக வைத்து அப்பா! அப்பா!வென்று அம்மையப்பனை அழைத்துத் தங்குமிடம். பச்சைப் பசுங்கிளிகள் பசுமையான இளந்தளிர்களிடையே இலையெனவும், கிளியெனவும் காணக்கூடாத வகையில் மறைந்து விளையாடும். சின்னஞ்சிறு சிட்டுக்குருவிகள் ஆகாய உயர்வில் உச்சிக்கிளைகளில் உட்கார்ந்து ஒருவரும் கேளாதபடி இரகசியமாய்த் தங்கள் காதலை அளவளாவிடும் இடம். இளஞ்சூரியன் இந்நிகழ்ச்சியை மக்கள் அறியவேண்டி இருட்டை விரட்டித் தன் கதிர்களை உட்செலுத்தி இந்த அற்புதக் காட்சியைப் பாருங்கள் என்று காட்டுமிடம், இந்தத் திவ்விய தருவின் இடையில் ஒட்டி நிற்பது மூன்று ஜன்னல்கள். கனகா எனும் தாய் அந்த ஜன்னல்களின் வழியாக

அவ்வறையில் "யார் இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்?" என்று எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே இருக்கிறாள்.

அவ்வறையில் வசிப்பது ஒரு வேடிக்கையான ஜீவன். இந்த ஜீவனைப் பார்த்து மகிழ்கின்றாள் போலும் எங்கள் கனகத்தாய். "அவர் யார்?" என்று கனகாவை வினவினேன்.

"அதைத்தான் தெரிந்து கொள்ள முயற்சிக்கிறேன்" என்றாள்.

"இது அறிவது எளிதாய்த்தானே இருக்கவேண்டும். அதற்கு இவ்வளவு முயற்சியா?" என்றேன்.

"பார்த்தும், பார்த்தும் மனம் தெளியவில்லை. நீயே பார்" என்றாள்.

என்னைத் தன்மடிமீது ஏற்றிக்கொண்டாள். நான் பார்த்த காட்சி வேடிக்கைதான். அந்த அறையில் உறையும் ஜீவன் மானிட உருவங்கொண்டவர்தான். ஆனால் மிருகங்களை யெல்லாம் அண்ணனென்றும், தம்பியென்றும் பாராட்டுகின்றார். உறவாடுகின்றார். ஆகையால் மானிடனென்று நிச்சயமாய்த் தீர்மானிக்க முடியவில்லை. இரண்டுகால் மிருகமாயிருக்கலாமோ வென்று நினைத்தேன். பக்ஷி ஜாதிகளைக் கண்டால் தாயே யென்றும், தங்கச்சி யென்றும், பெண்ணே யென்றும் அழைக்கின்றார். உணவு கொடுத்து "அம்மா சாப்பிடு" என்கின்றார்.

காகங்கள் அவரைச்சுற்றி நிற்கின்றனவே யன்றி, அகல்வதில்லை. பக்ஷிகளுக்கு அவரைக் கண்டால் பயமில்லை. அன்புதான். இவர் ஒரு காக்காயோவென்று நினைத்தேன். பிறகு முருகனைப் பாடினார். பாடிய

குயில்கள் பாட்டை நிறுத்தி விட்டன, இவர் காகமா யிருக்காது. இருந்தால் குயிலாகத்தான் இருக்கவேண்டு மென்று நினைத்தேன். மானிட உருவம் இப்படியும் இருக்குமா வென்று அச்ச முற்றேன். குறிப்பாய்ப் பார்த்தால் தலையில் மயிர் எல்லாம் நரைத்து பனி மூடியதுபோல் வெளுத்திருந்தன. இவர் கிழவராயிருக்க வேண்டுமென்று உணர்ந்தேன். ஏனெனில் தலையில் அநேக இடங்களில் மயிரின்றி வழுக்கை விழுந்து இருந்ததைக் கண்டேன். இவர் ஒரு ஞானியாயிருக்க லாமென்று நினைத்தேன். நல்ல கிழவர். ஆயினும் உடம்பில் தோன்றிய ஆற்றலைக் கண்டால் இளமை பூண்டு இருப்பதாகத் தோன்றியது. சக்திக்குக் குறை வில்லை. கையில் தடியில்லை. நடையில் தளர்வில்லை. பேச்சில் சோர்வில்லை. ஆனால் சொல்லில் பொருளுண்டு. அருளுண்டு. வாக்குண்டு. நல்ல மனமுண்டு. வாழ்த் தும் இயல்பு முண்டு. ஆகவே இந்த ஜீவன் ஒரு ஞானி தான்! முதிர்ந்த தலையும், வற்றாத இளமையும், குன்றாத அன்பும், ஆனந்தமும், பண்பும் உடையவரா யிருக்கின்றார். அவருடன் சம்பாஷித்துப் பார்த் தேன். தானும் சிரித்து, பிறரையும் சிரிக்கவைக்கிறார். தான் தாழ்ந்து பிறரைத் தாழவைக்கின்றார். தான் வாழ்ந்து பிறரை வாழ வைக்கின்றார். தானறிந்து பிறரை அறியவைக்கின்றார். இன்பம் ஒழுகும் சொல். சேவை செய்யும் கைகள். முறுவல் விளங்கும் முகம், ஒளி நிறைந்த கண்கள். கனகாவை விட்டு அகலாத இயல்புடையவர். இவ்விருவரும் ஒருவரை யொருவர் பாராட்டிக்கொண்டே வளர்ந்திருக்கிறார்கள் போலும்!

இளம் தாயாய் நிற்கின்றாள் கனகா. தானே புனைந்த காய்களால் அலங்கரிக்கப் பெற்றாள் தாய். சிவநீறும், சந்தனமும் நிறைந்துள்ள இளம் கிழவரைப் போலிருக்கின்றார். இந்தக் கனகாவை நாடிநின்ற ஜீவன் உலக நடவடிக்கைகளில் பெரியவர்களாய்க் கருதப்படும்

மக்களை சிறியரென்றே மதிக்கின்றார். உலகம் மதிக்காத எழைகளைப் பெரியார்களாக வைத்துப் போற்றுகின்றார். பெரியோர் என்று கருதும் மக்களுக்கு அவரைவிடப் பெரியோராய்க் கருதுவதுபோல் தோன்றிடினும் சின்னஞ் சிறுவர்பால் தாழ்மைக்குத் தாழ்மையாய் விளங்கிடுவார், நான் கனகாவைப் பார்த்து சொன்னதாவது "இவர் பெரியாருமல்லர். சிறியாருமல்லர். இவர் கிழவருமல்லர். இளைஞருமல்லர். இவர் மானிடரு மல்லர். மிருகமுமல்லர். பக்ஷியுமல்லர். தெய்வமு மல்லர். இவர் நல்லவருமல்லர், இவர் பொல்லாதவருமல்லர். இவர் யாரென்று தோன்றுதிடினும், இவர் தெளிவு, உள்ளத்தைக் கவர்கின்றது! அவரே நான், நானே அவர் என்ற எண்ணம் ஊறுகின்றது. அம்மா! எனக்கொன்றும் தெரியவில்லை. அவர் யாராயிருந்திடினும் முருகனென்றே நினைத்து வணங்கிச் செல்கின்றேன். உன்னையும், அவரையின்று காக்கும் பராசக்தியாகக் கருதி வாழ்த்தி செல்கின்றேன்" என்றேன்.

" தன்னையே தானறியாத் தன்மையை அடைந்த எங்களை நீ நன்றாய் உணர்ந்துவிட்டாய். உன்னை வாழ்த்துகின்றேன்" என்றாள் கனகா.

அதுமுதல் நாளது வரையில் மனதில் ஒரே கேள்விதான். நனவிலும் கனவிலும், என்ன கேள்வியென்றால், "அது யார்?" "அது, அதுதான் என்று உணர்வதல்லால் வேறு பேசவும், உணரவும் பொருளில்லை" என்கிறாள் கனகா.

மங்கையர் மன நிலை

> "தற்காத்து தற்கொண்டாற்பேணி—தகைசார்ந்த
> சொற்காத்து சோர்விலாள் பெண்."

இக்காலத்திலும் எக்காலத்திலும் பெண் பாலர்களுக்குச் சில அருமையான குணங்கள் இறைவன் கற்பித்திருக்கின்றார் என்பது பலரின் துணிபு. ஆண் பாலரைவிட பெண்பாலர்களிடம் சில பண்புகள் பூர்ண பயிற்சி அடைந்திருப்பதாகவே ஆராய்ச்சி ஞானிகள் கூறுகின்றனர். ஆண்பாலர்களை மரமாகவும், பெண் பாலர்களைக் கொடியாகவும் உவமை கூறுகின்றார்கள் கவிகள். ஆண்மக்கள் ஆதரவில் பெண்மக்கள் வளர்ந்து தங்கள் அபூர்வமான குணத்தையும், மணத்தையும் தேசத்தின் மானிடப் பண்பு சிறப்புறுவதற்காக அளிக்கின்றார்கள். இம்மங்கையர்களின் மனநிலைதான் என்னே?

கம்பனும் சீதையும்

ஸ்ரீ வால்மீகி என்ற மஹாகவி, மறு அவதாரத்தில் கம்பரென கவிச் சக்கரவர்த்தியாக உதித்தார்போலும்! அவர் ராமாயணத்தில் இந்த பாவனைகளை சில சிறந்த இடங்களில் குறிப்பிட்டுள்ளார், ஸ்ரீ ராமபிரானை, ஆண்மக்களுள் சிறந்தவன், எவ்விதம் நடந்துகொள்வான், என்ன மனத்தனுய் விளங்குபவன், குண விசேஷங்கள் எப்படி, மனம் எப்படி, ஒழுக்கம் எப்படி இவையெலாம் உலகுக்குணர்த்தும் அவதார புருஷன் என்று கூறுகின்றார். இவ்விதமே சீதாதேவியை மாதர்களுக்கு ஒரு பிரதிநிதியாகவே வைத்திருக்கின்றார். ராவணன் இறந்து போர்க்களத்தில் வீழ்ந்த பின், சீதா

தேவியை அழைத்துவரச் சொன்னான் ஸ்ரீ ராமன். சீதா தேவியை ராமன் பார்த்தான் என்று சொல்கின்றார் கம்பர்:

> கற்பினுக்கரசினைப் பெண்மைக் காப்பினைப்
> பொற்பினுக்கழகினைப் புகழின் வாழ்க்கையைத்
> தற்பிரிந்தருள்புரி தருமம் போலியை
> அற்பினத் தலைவனு மமைய நோக்கினான்.

சிறந்த மங்கையர்கள் லக்ஷணத்தையே குறித்துவிட்டார். ராமன் பிறகு கடிந்த சொற்களால் "சீதையை ஏற்றுக்கொள்ள முடியாது. எங்கேனும் செல்லலாம்" என்று சொன்ன கொடுமையை தவறென்று அன்னைக்குப் பரிந்து முன்னரே கவி கூறி விட்டார் போலும்!

கற்பு

ஊன் நிறைந்த உடலம் உயிர்த்தெழுந்தாடுகையில் உலகெலாம் ஊடுருவி அளித்துக் காத்து அருளும் தெய்வத்தை, காதல் கொண்ட கணவன்பால் கருத்து கந்து காணுவதன்றோ கற்பு. கணவன் உடலம் பெண் மக்கள் காதல் படரும் கோயில். சிற்றின்பமும், சிறு வாழ்வும் ஈன்றருளும் கணவன் காதல், பேரின்பமும் பெருவாழ்வும் நாட்டிவிடுகின்றது. கணவனெனும் கோயிலிலே கண்ட புருஷன் யார்? அணுகிச் சென்று சோதித்துப் பார்த்தால் உலகெலாம் ரக்ஷித்துக்காக்கின்ற கடவுளல்லவோ இக்கணவனெனும் கோயிலில் குடிகொண்டிருப்பது என்று பெண்மணிகள் உணருவார்கள். உணர்ந்தபின் ஒன்றென நின்ற தெய்வத்தையும், பேரின்பத்தையும், பெருவாழ்வையும், கற்பினால் சிக்கெனப்பிடித்து ஞானிகள் ஆகின்றார்கள். உலகில் புருஷன் ஒருவனே. அவன் ஜகந்நாதன். மற்றைய யாவரும் பெண்டிரே. யாவரும் அடைய வேண்டிய மஹா புருஷன் நிற்க, அவனைச் சிந்தியாது உலகின்

வேற்றுமையில் ஈடுபட்டு துன்பத்தில் உழலும் மக்கள் கற்பெனப்படும் தகைமையை அறிவரோ?

பௌருஷம் பேசும் பெண்கள் மடமை, தாழ்மை, தயை, இரக்கமின்றி உலகத்தில் உலவினால், இவர்களை ராமாயண காலத்தில் யார் என்று கூறுவார்கள். ராக்ஷஸி கள் தான். ஆண்மக்களெல்லாம் ஆண்டவன்பால் பெண் மக்களே. ஆண்டவன் எனும் பெருமரத்தில் படரும் கொடிகளே யாவர். இதை மறந்தால் சீதையின் கற்பைப்பற்றி பேசுவது பயனற்றதாகும். பெண்ணாய்ப் பிறந்தவர்கள் மேன்மக்களே. அவர் பெண்பாலர்; சீதையின் பாலர். கற்பை நினைந்து உலகெலாம், ஆணும் பெண்ணும், புருஷோத்தமன்பால் மனங் கரைந்தால் இடர் நீங்கும், தீயையும் எரிக்கலாம்.

சீதையின் மனநிலை

புருஷோத்தமனே அவதாரமாய் வந்த ராமனிடம், வைத்த உள்ளத்தை ராமன் அறியான் போலும் என்று வருந்தினாளாம் சீதை. கோபம் கொள்ளவில்லையாம். தன் விதி யென்றாளாம் கற்பினுக்கரசி. யாம் செய்த குற்றமெலாம் வினையாய் மாறி, வினைத்திறன் பின்பு விதியாய் வந்து தாக்குங்கால், விதியைத் தாண்ட அவன் நாமத்தில் ஊறும் அமிழ்தத்தை அருந்தும் மதி கொடுத்து கெதியளிக்கின்ற தெய்வத்தின் கருணை தான் யென்னே!

ராமனெனும் தெய்வத்திற்கு அபாயம் வந்து விட்டது என்று மடமையால் கருதினாள், தெய்வத்தையே நேருருவாகக் கொண்டு கண்ட அன்பர்கள், குழந்தை யாகவும், புருஷனாகவும், தோழனாகவும், அம்மையப்ப னாகவும் தானே அனுபவிக்கிறார்கள். தாயின் அன்பி னால் ராமனைக் குழந்தையாய்க் கருதி அவனுக்கு ஆபத்து நேரிட்டதே என்று நினைத்தாள். ராமனுடைய

பரம பக்தனுன லக்ஷ்மணனை அடாது பேசி விட்டாள். தர்மசங்கடம். துடித்துவிட்டான் லக்ஷ்மணன். சிறையானுள். சிறை மீட்கப்பட்டாள். மறுமுறை நாதனைக் கண்டாள் கற்புக்கரசி. லக்ஷ்மணனை கடிந்து விரட்டிய கடுஞ்சொற்கள் மீண்டும் அவள் மேலே பாய்ந்தன. இவ்வளவு அறியாமை கஷ்டத்திலும் தன்னை காத்தது தன் கற்பன்றோ! ஆணானும், பெண்ணானும் ஈசனை மறந்தவர்கள் கற்பற்றார். ஈசனை நினைந்தவர்களே கற்புடையவர்கள்.

கடிந்த ராமனைப் பார்த்து சீதை மங்கையர் மனப் பான்மையை வெளியிடுவாள். அற்புதமான பாட்டு. தாயின் மனத்தை யாரறிவார்!

> பங்கயத்தொருவனும் விடையின்பாகனும்
> சங்குகைத் தாங்கிய தருமமூர்த்தியும்
> அங்கையினெல்லிபோலனைத்து நோக்கினும்
> மங்கையர் மன நிலை உணரவல்லரோ!

"திருமூர்த்திகளும் அறியாததல்லவோ மங்கையர் மனோநிலை. அற்புதத்தின் நேர்மை, அறியா உலகின் புகழ், ஊரார் வன்சொல், தளராத கன்னெஞ்சம், உணராத தர்மம் இவையெலாம் செறிந்த உலகுக்கு அதிபதியாய் நின்ற ராமா நீ உணர்வாயோ" என்றாள் அம்மையார். அப்படி சுட்டிக்காட்டிய மனோநிலை யாதோ? ஊகிக்கத்தான் வேண்டும் போலிருக்கிறது.

கற்பின் வெற்றி

பண்டொரு நாள் காக்காசுரன் அம்மையார் மார்பில் குஹ்யமாயிருக்கும் ஸ்தானங்களைக் குத்தினான். ஸ்ரீ ராமன் மடியில் தலைவைத்துத் துயிலும் தருணம். காயத்தினின்று ரத்தம் பெருகி ராமன் நெற்றியில் ஒரு சொட்டு விழுந்தது. எழுந்து பார்த்தபோது, கற்புக் கரசியின் மனோநிலையைக் கண்டான். காக்காசுரனைக்

கண்டபோதே ராமனை எழுப்பி இருக்கலாமே. ஏன் இந்த துன்பத்தை அநுபவித்திருக்க வேண்டும். கற்பை யிழப்பினும் கற்பை காக்கும் மனோநிலையில் நின்றது மங்கையின் மனோநிலை. ராமனை எழுப்பவில்லை. அசுரன் வந்து தாக்கினபோதும் சலியாத அன்புடன் அதை சகித்துக்கொண்டு ராமன் துயிலும் சுகத்தைக் காத்த கற்பு! ராமன் இதை சிந்தையில் உணரவில்லையே யென்றாள் போலும்! உலகத்தோர் வசைமொழிக்குப் பயந்த ராமன், வசை, இசை, உயிர், உடல், உணர்வு எல்லாம் கடந்த மங்கையின் மனநிலை யறியாது கூறு கின்றானே என்றாள் போலும்!

"தாள்வணங்கித் தூய்மை கொண்டாள் அகல்யை. நீயே என்னுள்ளமாய் கொண்ட பண்பு அறிந்திலையோ!"

சீலமும்காட்டி என் கணவன் சேவகக்
கோலமுங்காட்டி யென் குலமும் காட்டி யிஞ்
ஞாலமுங்காட்டிய கவிக்கு நாளறுக்
காலமுங் காட்டுமே கொல்லென் கற்பென்றாள்

சீதையின் மனோநிலை அறிந்திலன் தர்மமூர்த்தி.

முன்னம் அவனது நாமம் கேட்டாள்
அவனிருக்கும் ஆரூர் கேட்டாள்
பின்னர் அவனுடைய வண்ணம் கேட்டாள்;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அத்தனையும் அன்னையையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

அப்பர் ஸ்வாமிகளும் மங்கையாயின பின்புதான் மங்கை யின் மனோ நிலை பெற்றார் போலும்! வைத்த உள்ளம்

மாறுத நிலைபெற்றார். கற்புப் பெற்றார். அப்பர் பெற்ற கற்பை யெப்படிதான் ஏற்றுவது! மங்கையர் மனோ நிலையின் பெருமையை புராணங்களிலும், சரித்திரங் களிலும் பார்த்து மகிழலாம். அகல்யா, சீதா, திரௌ பதி, தாரா, மண்டோதரி இந்த ஐந்து கன்னிகைகளை நினைத்தால் சாலவும் நன்று என்ற பழமொழியுண்டு. அயோனிகள் சக்தி ஸ்வரூபங்கள்.

மண்டோதரியின் தூய்மைநிலை ராவணனை காப் பாற்ற முடியவில்லை. கற்பு, தன்னை காக்க தன்னையே யிழக்கவும் கூடும். கற்பெனும் தேவி ஒன்றே. மண்டோ தரியின் கற்பு ராவணனை காப்பாற்றிவிட்டால், ராமன் தோல்வி அடையத்தான் வேண்டும். சீதையும் கற்பு இழக்க நேரிடும். அல்லையேல் உயிர் இழக்கநேரிடும். மற்றவர்களும் கற்பை இழக்க நேரலாம். மண்டோதரி யின் கற்பும, சீதையின் கற்புடன் கூடி ராவணனை அழித்தது என்றே சொல்லலாம். மண்டோதரியின் மனோ நிலையைத்தான் யாரறிவார். உயிர்துறக்கும் சமயம். போர்க்களத்தில் ராவணன் விழுந்துகிடக்கும் தலம் தேடிச் சேர்ந்தனள். எதிரில் ராமமூர்த்தி தரிசனம் கண்டாள். சொல்லுவாள் :

> ஆராவமுதாய் அலைகடலில் கண்வளரும்
> நாராயணன் என்றிருப்பேன் ராமனை நான்

ராமனை இவ்வாறு வணங்கிய பிறகு புருஷன் சடலத்தைப் பார்த்துத் திரும்பி,

> ஓராதே கொண்டகன்றாய் உத்தமனார் தேவிதனைப்
> பாராயோ நின்னுடைய மார்பகலம் பட்டவெலாம்.

என்று பரிதபித்தாள். ராமனிடம் தெய்வமென்றறிந்த உணர்ச்சியால், கோபம் கொள்ளவில்லை. அன்பும் குன்ற வில்லை. நாடெலாம் அழிந்து, புருஷனையும் இழந்து,

உயிர் துறக்கும் வேளையில் கற்பினுக்குச் சுடராய் விளங்கும் மண்டோதரி, கற்பின் குறியை உலகுக் குணர்த்த வேண்டுமென்றே "நாராயணா" என்ற சப்தம் நாவில் ஒலிக்க, புருஷன் பரிதாபம் ஓர் மூடு நெருப்பாய் அவளை எரிக்க, மோக்ஷமடைந்தாள்.

மங்கையர் மனோநிலை அதிசயம். சீதையின் வெற்றி மண்டோதரியின் வெற்றிதான். பூமியின் பொறையும், கலங்காத உள்ளமும், மாறாத அன்பும், கைவிடாத சேவையும், சோர்வுபடாத நெஞ்சும், தெய்வத்தின்பால் பிரியாத பக்தியும், உலகெலாம் தம் குழவியாக பாவிக்கும் அருளும் பெற்று நீடூழி வாழ்வாராக நமது இந்திய மங்கையர். இக்குணங்களெல்லாம் சேர்த்து செய்தது குங்குமம். அவையெல்லாம் உறையுமிடம் திருநீறு.




நிறுத்து! நிறுத்து!

வேகமடக்கியே விளங்கு மெய்ஞானிக்கு
யோகந்தான் ஏதுக்கடி—குதம்பாய்
யோகந்தான் ஏதுக்கடி —குதம்பை சித்தர்.

நிறுத்து! நிறுத்து! நிறுத்து! என்ற சப்தம் காதில் எட்டியது. ஓடிப்போய் தெருவில் பார்த்தேன். எதைப் பார்த்தாலும் வேகமாய் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. போலீஸ்காரன் வேகமாய் ஓடும் மோட்டாரை 'நிறுத்து நிறுத்து' என்று ஊதுகிறான்; கையை காட்டுகிறான். "பிரேக் முறிந்து விட்டது. நிறுத்த முடியவில்லை" என்று கூக்குரல் செய்கிறான் மோட்டாரோட்டி. பக்கத்தில் இருக்கும் பனைமரத்தில் மோதுகிறது. வண்டி சேதம். ஆள் சேதம். ஐயோ பாவம்!

பக்கத்தில் ஜட்கா வண்டி ஒன்று. குதிரை திடீரென்று பயந்துகொண்டு நாலுகால் பாய்ச்சலில் விரைந்து ஓடுகிறது. வண்டிக்காரன் கையில் கடிவாள வார் கூட இல்லை. வண்டி ஆடியாடி கீழே விழுந்து விடுகிறது. வண்டிக்காரனும், வண்டியிலிருக்கும் பெண்களும், ஆடவர்களும் பிழைத்தது தம்பிரான் புண்ணியம். நல்ல அடி. உயிர்ச்சேதமில்லையென்றுதான் பேப்பரில் வருகின்றது. குதிரையும் கீழே விழுந்து கிடக்கிறது. ஐயோ பாவம்!

கனத்த பாராங்கல் உருளையை மலையின் உச்சி மேலிருந்து கீழே செல்லும் பாதையில் உருளும்படி தள்ளிவிட்டால் அதை யார் நிறுத்துவது? ஓடி பாதையில் ஏறியும், இறங்கியும் போகின்ற நன்மக்களையெல்லாம் தள்ளி நொறுக்கி விடுகிறது. ஐயோ பாவம்!

இவை போல் பாவங்கள் பல. இந்த கஷ்டங்கள் எல்லாம் வருவதற்கு முதன்மையான காரணம் என்ன வென்ருல் நிறுத்தத் தெரிந்து கொள்ளாமல் ஓட்ட முயற்சிப்பதாலே தான். அது மாத்திரமா? நிற்கத் தெரிந்து கொள்ள வேண்டும். நிற்கத் தெரியாதவனு, நிறுத்தும் ஆற்றலை உடையவன் ஆவான்? வெள்ளம் அடித்துக் கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டிருப் பதில் என்ன பயன்? வெள்ளத்தை நிறுத்தும் ஆற்றல் இல்லையே? "ஓட்டத்தை யடக்கு. நீ நிற்கக் கற்றுக் கொள். நீ ஓட்டத்தில் நிலை பெற்றிருக்கப்பெற்ருல் மற்ற யாவையும் நிறுத்தி விடலாம்" என்று உபதேசிக்கிருர்.

'உலகத்தைக் கெடுப்பது வேகம். உலகத்தைக் காப்பது யோகம்' என்ருர். யோகம் என்பது ஒன்றை ஒன்றுடன் சேர்த்துக் கூட்டும் தன்மை. பரமாத்மா வுடன் ஜீவாத்மாவைச் சேர்த்து நிறுவுவது யோகம். நினைவினுல் சித்திக்கும் பலன். அன்பெனப்படுவது யோகத்தை முடிவு பெற உதவும் பண்பு. ஞானசம்பந் தர் 'ஓட்டிட்ட பண்பு' என்ருர். கல்லுக்குச் சுண்ணும்பு போல்தான் மனதுக்கு அன்பு எனும் பண்பு. அன்பினுல் மனதை தெய்வத்துடன் சேர்த்தால் இதுவே யோக மாகும். ஆசையால் மனதை உலக விஷயங்களிலும், பொருள்களிலும் சேர்த்தால் அது **வேகமாகும்**—வேகத் தையுடைய ஒருவன் வேகத்தை வென்று நிலை பெறல் வேண்டின் செய்வது யாது? யோகத்தைச் செய்ய வேண்டும்.

வெறிபிடித்து ஓடுகிறது மாடு. தனக்கும் பிறருக் கும் ஆபத்து. "வெறி வென்றவரோடு உறும் வேல வனே" என்ருர் அருணகிரியார். வெறியை வென்ற பெரியோர் மனத்தில் விடாமல் சஞ்சரிக்கும் குஞ்சரன் என்ருர் முருகனை. ஐவாய் வழி செல்லும் அவாக்கள் வெறியை ஊட்டி விடுகின்றன.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாருமில்லை வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாகி வெறியும் அடங்கினல்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே!

என்றார் திருமூலர்.

ஐம்பொறிகளின் வெறியை வென்றவர்கள் தன்னிலையை உணர்வார்கள். தன்னிலையில் நின்ருல் அல்லவோ அந்நிலையில் ஆடப்பயிலலாம். நிலைத்தத தன்னிலையை அரங்கமாகக் கொண்டால்தான் தானும் ஸ்ரீ நடராஜ பிரபுவாக நடனம் செய்யலாம். அப்படிச் செய்வதே இந்த பூலோக வாழ்க்கையின் மேன்மை. இதை பட்டினத்தார் சித்திரிக்கின்றார். தாதியின் மனம் நீர் குடத்தின் மேல்தான். காதிவிளையாடி, இரு கை வீசி ஆடிவருவாளாம். யோகமுற்ருல் அல்லவோ போகத்தின் பயனை உணரலாம்.


யோகரா தோவா போகரா தோவா
சங்கரா தோவா சங்கவிஹீன :
யஸ்யப் ப்ரம்மணி ரமதே சித்தம்
நந்ததி நந்ததி நந்தத் யேவா

என்கிறார் ஆதி சங்கரர்.

வேகமாய் நம்மை தள்ளிக் கொண்டு போவது நமது விதிவினைப்பயன். காலமென்னும் வெள்ளம் அடித்துச் செல்கிறது இந்த ப்ரபஞ்சமெனும் சிறு வாழ்வை. வெள்ளத்தைத்தடுத்து, எதிர்த்துச் சென்ருல், இருந்த இடத்திலேயே இருக்கலாம். கால வெள்ளத்தைத் தடுக்கும் வழியை உபதேசிக்கிருர் அருணகிரியார். அதுயாது?

"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை!" மன தைரியத்தையும், ஆற்றலையும் கைவிடாதீர். கோழையுற்று நம்மை பலஹீனர்களாய் ஆக்கிவிடும் சினத்தை விடுங்கோள் என்கிறார். வேகத்தை யடக்கி ஆற்றலை இவ்வாறு சேமித்து வைத்துக் கொண்டால் தான் ஒருவன் நிலை பெறுவான். நிற்கத் தெரிந்து கொள் வான். ஆசையற்ற புருஷன் செய்யும் தர்மம், "தானம் என்றும் இடுங்கோள்." செல்வம் எனும் வெள்ளத்தை விடுத்துக் கொண்டேயும், தானம் செய்து கொண் டேயும் இருந்தால், அந்த வெள்ளம் நம்மை அடித்துச் செல்லாது. வெள்ளம் போனாலும் நாம் இருந்த இடத் தில் இருக்கலாம்.

"நீங்கள் இருந்தபடி இருங்கோள்" என்றார். இவ் வாறு நிலை பெற்றால் முருகன் அருள் தானே வந்து உமக்கு வெளிப்படும் என்றார் அருணகிரியார். குதம்பை சித்தரும் இந்த தத்வத்தை தம் அனுபூதி முகமாக வெளிப் படுத்தியுள்ளார். இது அற்புதம்!



விளையாடுங்கள்!

நின்னிற் பிரிதாய் நிலையிற்றிரியா
தன்னிற் பிறிவாயின தானறமும்
உன்னிற் பிறிதாயினவோ வுலகம்
பொன்னிற் பிறிதாகிய பொற்கலனே

"வேதப் பொருளே விளையாடுதியோ" —கம்பர்.

குழந்தைகாள் விளையாடுங்கள்! ஆடுங்கள்! ஆடுங்கள்! இன்பம் விளைய ஆடுங்கள்! அன்பு துளிர ஆடுங்கள்! ஆற்றல் பெருக ஆடுங்கள்! ஞானம் தழைக்க ஆடுங்கள்! நன்மை பரவ ஆடுங்கள்! தீமை அழிய ஆடுங்கள்! உலகம் செழிக்க ஆடுங்கள்! பண்பா டொளிர ஆடுங்கள்! குழந்தைகளின் விளையாட்டன்றோ உலகை ரக்ஷிப்பது!

குழந்தைகள் யாவர்! குழைந்த மனமுடை யவர்கள்தான் குழந்தைகளாவார்கள். உலகை யெல்லாம் பிறப்பித்து, ரக்ஷித்து, லயப்படுத்தும் முத் தொழிலும் ஒரு குழந்தையின் விளையாட்டு. தெய்வமாம் இறைவனுக்கு சிருஷ்டியே ஒரு விளையாட்டாம். "அலகிலா விளையாட்டுடையார் அவர் அன்னவர்க்கே சரண் நாங்களே" என்று கம்பர் பாடியுள்ளார். "சொந்த மாய் எடுப்போர்க்கெல்லாம் குழந்தை" என்று குரு நாதனை பாடியதும் யாவரும் உணர்ந்திருப்பார்கள். அபேத உள்ளத்தில் ஆணவமறியாத அன்பல்லவோ குழந்தையின் அவதாரம்.

தெய்வக் குழந்தை முன்னொருகால் மானிடக் குழந்தையுடன் விளையாடியதாம். இதை மானிடக் குழந்தை நமக்குத் தெரிவிக்கின்றார். யார் மூலம் என்றால்

கம்பர் மூலம். பிரஹ்லாதன், சிறு பாலன், பயமறியான். தீமையும், தீமை விளைவிக்கும் விரோதியாரையும் தம்மவரெனக் கருதும் பண்புடையான். உலகெலாம் ஆண்டவன் ஸ்வரூபமென்ற கருத்துடையான். தெய்வமும் தன்போல் ஓர் பாலனெனக் கொண்ட சிந்தையான். தகப்பன் வெறுத்து பகைக்கும் நாராயணனைத் தன் ஆத்ம குருவாய்க் கொண்ட சீலன். இத்தகையப் பிள்ளையை திருத்த முடியாமல் அவனைக் கொல்லவே துணிந்தான் இரண்யகசிபு. சமுத்திரத்தில் எறிந்தான். நெருப்பில் எரித்தான். விஷத்தால் மாய்க்க முயற்சித்தான். பிரஹ்லாதன் சாகாமல் நாராயண பஜனத்தைக் கொண்டே வெளியே கடந்து வந்துவிட்டான். பிரஹ்லாதன் தன் கடவுளை நோக்கி கேட்பதும், பேசுவதும், புகழுவதும் வெகு அழகு !

"வேதப்பொருளே ! விளையாடுதியோ !"

குழந்தைகளுடன் குழந்தையாய் மறைந்து நின்று மறைபொருளாய் காக்கும் தெய்வத்தை "விளையாடுகிறாயா ! பேஷ்" என்று சொல்லுகிறது கம்பர் சித்திரம்.

"உன்னிற் பிரிதாயினவோ உலகம்
பொன்னிற் பிரிதாகிய பொற்கலனே"

பொன்னால் செய்யப்பட்ட ஆபரணம் பொன்னை விட்டு பிரியாது நின்றவாறு, "இந்த உலகமும் உன்னைவிட்டு பிரிந்ததுவோ? இல்லை! இல்லை!" இதை உபதேசிக்கின்றது ஒரு குழந்தை.

சிருஷ்டியின் காரியம் தெய்வத்தின் காரியம். அதில் தெய்வத்திற்குக் கருத்துண்டு; கவலையில்லை. ஆகவே இது விளையாட்டு. குழந்தைகளெல்லாம் நன்றாய் **விளை**யாட வேண்டும். **வினை**யாடல் ஆகாது. ஆடலால் விளைவு வேண்டும். இயற்கையில் ஆடலைப் பார்க்கின்றோம். ஆகாய வெட்ட வெளியில் காற்றாட, அக்காற்றில்

மேகமாட. மேகம் பூமியுடன் வருஷித்தேதானுட, வருஷித்த வெள்ளம் நதிதோறும், பொய்கை தோறும் பரந்தாட, ஓடும் தண்ணீர் காயும் நஞ்செய்களிலாட, விதைத்த வித்தின்று தானெழும் முளையாட, பசும் பயிராட, நவதான்யமாட, நாடெல்லாம் செழுப்பாய் நாகரீகம் ஆடுகின்றதை பார்க்கின்றோமல்லவா? குழந்தைகாள்! நீங்களும் ஆடுங்கள். தெய்வம் போன்ற மனத்துடையீர்! ஆடியே உலகைக்காக்கும் நடராஜன் இடைவிடாது உம்முள் ஆடிக்கொண்டிருக்க, நீங்களும் ஆடுங்கள்!

ஆடுவதற்கு நல்ல பண்ணுண்டு. பாடலுமுண்டு. இவைகளை மேற்கொள்வீர். பண்ணும் பாடலும் தானுகி ஆடியே இன்பம் விளைவிக்கும் மெய்யன்பனைப் பற்றியே ப்ரஹ்லாதன் போலும், துருவன் போலும் விளையாடுங்கள். ஆடினுல் விளையும் பண்பு! பண்பும் ஆடப் பெற்றுல் உலகம் மேன்மையடையும்.

> *"பாராகிப் பண்ணுகிப் பாடலாகிப் பரஞ்சுடராய்*
> *அடிகள் நின்றவாரே"*

எனவும் அப்பர் வாழ்த்தியுள்ளார். அப்பரும் நம்மொத்த ஒரு மென் குழந்தைதான். கருத்த குஞ்சியிலும், ஆக்கையின் இளமையிலும், நரைத்த சிகையிலும், ஆடையிலும், உடையிலும் இல்லை குழந்தையின் தத்துவம். உள்ளத்தின் மென்மையிலும், அன்பின் மேன்மையிலும், பண்பின் சீலத்திலும், கள்ளம் தவிர்ந்த கருத்திலும், வெள்ளம் எடுத்த ஆர்வத்திலும், அபேதத் தன்மையிலும், உபகாரச் சிந்தையிலும், மனதில் பற்றுத உலகத் தொடர்பிலும், ஏவரையும் நம்மவரெனக் கருதும் மாண்பிலுமன்றோ நிற்கின்றது குழந்தையின் தத்துவம். யாவரும் குழந்தையாக

முடியும். ஆண்மையுடன் மூப்பின் பேதத்தை வென்று குழந்தைகளே ஆடுங்கள்! விளையாடுங்கள். கண்ணனும் கந்தனும் அதோ வந்து காத்துக் கொண்டிருக்கின்றனர். அவருடன் கலந்து தொண்டர் குழாமுடனும் கூடியே விளையாடுங்கள்.

நன்மை விளையவே உலகம் செழிக்கவே விளையாடுகவே!

சிவனும்—சீவனும்

"செப்பினில் ஜீவன் சிவத்துள் அடங்குமே"—திருமூலர்

உப்பைப்பார்த்தார். உபதேசம் கொண்டார். சூரியன் வெம்மையால் நீரெல்லாம் ஆவியாய் வானேற, முத்து முத்துக்களாய் கணக்குக் கெட்டாத பேத ரூபங்களாக உப்பு உருத்தரித்து விளங்குகின்றது. ஆச்சரியம்! என்ருர். உப்பை மறுபடியும் நீரில் இட்டாலோ கரைந்து விடுகின்றது. கலந்து விடுகின்றது. நிறைந்து விடுகின்றது. மனங்கரைந்து, உயிர் கலந்து, எங்கும் நிறைந்த தெய்வப் பொருளுடன் பெருமக்கள் உள்ளமும் கரைந்து, கலந்து நிறைந்தவண்ணம் போல் அல்லவா உப்பின் இயல்பு ஏற்பட்டிருக்கின்றது என்று வியந்தார். உலகுக்கு உபதேகின்ருர் திருமூலர்.

அப்புனிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற்று உருச்செய்தது அவ்வுரு
அப்பினில் கூடி அது ஒன்ருகு மாறு போல்
செப்பினில் ஜீவன் சிவத்துள் அடங்குமே.

வேற்றுமையின் வெப்பத்தால் எல்லாம் ஒன்றெனும் உணர்ச்சி மறைந்து நிற்க, ஜடத்தில் நின்று விளையாடும் சிவ தத்துவம் வெவ்வேறு ஜீவன்களாக உப்பு

முத்துக்கள் போல சிருஷ்டியில் விளையாடக் காண்கிறோம். அரூபமாய், ருசியாய் நின்ற உப்பு, நீர் வருண்டபின், உருப்பெற்றது. பேர்பெற்றது. ஜீவனும் அதுபோல் உருப்பெற்று பேர் பெற்றது. பேரில் பெருமை பெற்று, நடிப்பினும் தெய்வத்தின் அன்பு பெற்று, ஒருமையெனும் பிரவாஹத்தில் கருணையாய் கரைந்தானகில் தன்னுரு சிவத்தின் அருவாய் நிற்க, ஊரும், பேரும், பெருமையும், சிவகருணையில் கரைந்து பேரின்ப இரசமாகி சிவத்துடன் அமர்கின்றானும். இது வெகு நல்ல உபமானம். ஆகவே வேற்றுமையின் கொடுமை அகல வேண்டில், கருணையின், அன்பின் ஒற்றுமையை நினைத்தால் போதும். அன்பே சிவமானதால், சிவசிவ என்று நினைத்து சிவத்தில் நனைந்து ஈடேறுமின் என்று திருமூலர் உபதேசிக்கிறார்.

அருணகிரி ஸ்வாமிகள் கயிலைமலைத் திருப்புகழில் பாடியுள்ளதை நினைக்கவேண்டும்.

"ஜீவன் சிவ ஸ்வரூபம் என்று தேறி ஞானம் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தியுடன் நாளும் களிக்க அருள் தருவாயே" என்று வேண்டுகின்றார்.

அப்பர் ஸ்வாமிகளும் சிவத்தின் தத்வத்தை உணர்த்துங்கால் "ஆணும் பெண்ணும் பிறர் உருவும் தம்முருவும் தாமேயாகி"......"நிமிர்புன சடையடிகள் நின்றவாறே" என்றார்.

சித்தர்களும் உருவத்தைப் பார்த்தால் உருவத்தில் விளங்குகின்ற தெய்வ சக்தியைப் பார்க்கவேண்டும் என்று உபதேசிக்கின்றார்கள்.

"உரு அரங்கமாகி நின்ற உண்மை யொன்றை ஓர்கிலீர்" என்பர். அரங்கமும் அரங்கத்தில் ஆடுகின்ற பொருளும் ஒன்றாய் இருப்பதால் ஆதார ஆதேய

மென்று தெய்வப் பண்பைப் பாடியுள்ளார் தாயு மானவர்.

பட்டினத்தார் கடல் நீரில் ஆற்று நீர்போல் அன்பாய்க் கலந்தாராம். "கடல் நீரும் ஆறும்போல் கலந்து கரை காணேண்டி. உடலும உயிரும்போல் உட்கலந்து நின்றுண்டி" என்று தன் அனுபவத்தை வெளியிட்டிருக்கிறார். கலந்தவுடன் பட்டினத்தார் பார்க்கின்றார். "கங்குல் பகல் அற்றிடத்தைக் காட்டிக் கொடுத்தாண்டி. பார்த்தவிடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி." காலத்தைக் கடந்த இடம் காதலால் கலந்த இடம். அன்பாய் நிறைந்த இடம். நான் என்பதழிந்த இடம். எங்கும் மோனவுருவாய்க் காணுமிடம். பார்த்ததெல்லாம பரமாக நின்ற இடம். இங்கேதான் ஜீவனும் சிவமாகுமிடம்.

உலகின்கண் காய்ச்சலை நன்குணராது காதலென்று விளக்குப் பூச்சிபோல் விழுந்தழியும் மக்களைப் பார்த்து "காதல் கொண்மின்" "காதலாகி கசிந்து உருகுமின்" என்றெல்லாம் உபதேசிக்கின்றார். வேற்றுமையின் வெப்பம் தணிய ஒற்றுமை குளிர்ச்சியை நாடும் உணர்ச்சியே காதலெனப்படும். ஒற்றுமை உலகெலாம் பரந்த சிவதத்துவமாய் விளங்குகின்றது. சித்தர் வாக்கியம் உண்மையின் உபதேசம்.

ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே
அனாதியானது ஒன்றுமே

வேற்றுமையின் தாபம் வேற்றுமையால் அடங்காது. உலக ஒற்றுமையை உணர்ந்து ஒழுகினாலன்றி மனக்குளிர்ச்சி ஏற்படாது. அன்பெனும் நீரில் ஜீவன்

தன் பண்பைக் கலந்தால் சிவமாய் இருக்கத் தடையு முண்டோ? இல்லை எனலாம். கம்பரும்,

என்பு தோலுடையார்க்கும் இல்லார்க்கும் தம்
வன்பகைப்புலன் மாசறமாப்பதென்
முன்பின்பின்றி மூவுலகத்தினும்
அன்பின் அல்லதோர் ஆக்க முண்டாகுமோ

என்று பாடுகிறார்.

பாரதியார் உபதேசமும் இதுவேயன்றோ! வேற்றுமையில் திளைக்கும் மாந்தர் நெஞ்சில் தீ யொன்று இருக்கின்றதாம் அது சினம் எனும் தீயாம்.

துச்சமெனப் பிறர் பொருளைக் கருதாதாலே
சூழ்ந்ததெலாங் கடவுளெனச் சுருதிசொல்லும்
நிச்சயமா ஞானத்தை மறத்தலாலே
நேர்வதே மானிடர்க்குச் சினத்தீ நெஞ்சில்

என்றார். பின்னும் சொல்வார்,

சினங்கொள்வார் தமைத்தாமே தீயார் சுட்டுச்
செத்திடு வாரொப்பாவார்; சினங்கொள்வர்தாம்
மனங்கொண்டு தங் கழுத்தைத் தாமே வெய்ய
வாள் கொண்டு கிழித்திடுவார்..............
............துயரக்கடலில் வீழ்ந்து சாவார்.

வேற்றுமையை விட்டொழித்தால், சிவனுடன் கலந்தால் அல்லல் ஒழியும். ஆனந்தம் மூளும் என்றார்.

" அல்லலில்லை அல்லலில்லை அல்லலில்லை
அனைத்துமே-தெய்வமென்றால் அல்லலுண்டோ "

—பாரதியார்.

விதியும் கதியும்

காணமற்கண்டு கருத்தோடிருப்போர்க்கு
வீணசை ஏதுக்கடி—குதம்பாய்
வீணசை ஏதுக்கடி— குதம்பை சித்தர்

ஆசையாலும், வெறுப்பாலும் மானிடன் ஒன்றை அணைப்பான்: மற்றென்றை அகற்றுவான். வேற்றுமை உணர்ச்சியால் தன்னை விட்டு அகற்றப்பட்ட உலகம் மீண்டும் இயல்பின் ஒற்றுமையால் நம்மேலேயே மூள்கின்றது. அதே வேற்றுமை உணர்ச்சியில் அணைத்த உலகம் நம்மைவிட்டு அகல்கின்றது. சமுத்திரத்தில் நீராடச் சென்றவன் அணைத்த நீர் தன்னுடன் நில்லாது நீருடன் நீராய் அகல்வது போலும், அகற்றிய நீர் அகன்றே நில்லாது மீண்டும் வந்து தாக்குவது போலும் தான் இந்த உலகின்கண் மானிடம் ஆசையாலும், வெறுப்பாலும் அணைப்பதும் அகற்றுவதும். வேண்டிய பொருள் அகல்வதும், வேண்டாத பொருள் தீண்டுவதுந்தான் துக்கத்தை உண்டு பண்ணுகிறது? 'விதி என் தலைவிதி'யென்று கதறுகின்றான். விதியை வெல்ல வேண்டுமானல் மதியாலன்றி வேறில்லை. உலகப் பண்பை நன்கு அறிந்து ஞானத் தோடிருப்போர்க்கு விதியின் தொல்லை யில்லையாம்.

நமது ஆசைகளே வினையாகும். வினைத்தொகுதிகள் வந்து தாக்குவதும் நமது வியாதியாகும். விதியின் வலியை யார்தான் வெல்ல முடியும்? வினைப்பயன் அல்லவோ விதி.

"மெய் வாய் விழி நாசி யொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவா வினையே"

என்று வினையின் இயல்பை வகுத்தார் அருணகிரி அனுபூதியில். ஔவையார் உபதேசிப்பதையும் பார்க்க வேண்டும்.

> வினைப்பயன் வெல்வதற்கு வேதமுதலாம்
> அனைத்தாய நூலகத்தும் இல்லை—நினைப்பதெனக்
> கண்ணுறுவதல்லாற் கவலைப்படே னெஞ்சே மெய்
> விண்ணுறு வார்க்கில்லை விதி!

விண்ணுற்றால் அன்றி விதியை வெல்ல முடியாதென்று கூறினாள். வினையையும் அனுபவித்தே தீரவேண்டும் என்றாள்.

> தாந்தா முன் செய்த வினை தாமே யனுபவிப்பார்
> பூந்தாமரையோன் பொறிவழியே-வேந்தே
> ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
> வெறுத்தாலும் போமோ விதி!

வினையையும், விதியையும் வெல்வது மண்ணுற்ற மானிட முயற்சியால் முடியாதென்று கூறி, விண்ணுற்ற ஒற்றுமையில், ஒருமையின் அனுபூதியிலே இவை கரைந்து விடுமென்ற தத்துவத்தை உபதேசித்தார்.

கம்பராமாயணத்தில் ராமன் லக்ஷமணனைப்பார்த்து "கோபத்தை அடக்கு, பரதன் மேல் சீறாதே" என்று சொல்லி விதியின் வலியை விளக்குவார். நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை என்றும், ஊரின் பிழையன்று என்றும், தம்மை பெற்றெடுத்த தாயின் பிழையன்று என்றும், பரதன் பிழையன்று என்றும், விதியின் பிழையென்றும், இதை அறியாது நீ ஏன் வெகுண்டது என்றும் வெகு கவர்ச்சியாய் சொல்லி விட்டார்.

'காட்டிற்குப் போவது விதியின் பிழை. தெய்வ

சங்கல்பத்தை யார்தான் மாற்ற முடியும்? என்னாலும் முடியாது' என்று சொல்லி விட்டார் ஸ்ரீராமன்.

வேற்றுமை உணர்ச்சியை அறவே ஒழித்தால் வினைப்பயனாகிய விதியகலும். உலகெலாம் ஒன்றென்று அறிந்த அறிவில் நின்று விட்டால் வேற்றுமையில் நம்மை நாட்டி அதிலே நம்மை வதைக்கும் வினை, விதி யெல்லாம் மாறும். இதுபோக, ஸ்ருஷ்டியின் போக்கு சிவன் போக்கு. தெய்வ சங்கல்பத்தால் வரும் நிகழ்ச்சி களை மாற்ற ஒரு மருந்துண்டு. "நானும் நீயும் ஒன்றானால் நவிலத்தகுமோ பேரின்பம்" என்ற வாக்கியத்தின் படி சங்கல்பம், விகல்பம், அற்று நின்றால் தெய்வ சங்கல்பமே நமது சங்கல்பமாவதால் உலக நிகழ்ச்சி களால் வருத்தம் வராது. விகல்பம் அற்றதால் உல கெலாம் யானாகும். இங்கு வினையின் தொடர்பு அறும். ஆகவே வினை, விதி இரண்டையும் ஒழிக்க ஒரு வழி யுண்டு. அதுதான் மானிடருக்குக் கதி யென்றார். அந் தக் கதி யாது? முருகன் சரணம் என்று உபதேசித் தார்.

............கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

என்பதும் அனுபூதியல்லவோ? திருவகுப்பிலே இந் தத் தத்துவத்தை விளக்குகின்றார்.

வினைப்பகை யறுப்பவன் நினைத்தவை முடிப்பவன்
மனத்துயர் கெடுத்தெனை வளர்த்தருள் கிருபைக் கடல்
வேலன் வாய்த் திருப்புகழ் கற்றவர்
சீலமேத்திய சித்த பிரசித்தரே.

வினையென்பது ஒரு சுமை. வேண்டாதது ஒன்று மனத் தில் உற்றால் ஒரு பெருத்த பளுவாய் இருக்கின்றது. கோபுரத்தில் காணப்பட்ட ஒரு பொம்மை 'இந்தப்

பெரிய கோபுரத்தை தாங்குகின்றேன்' என்று மனம் வாடியது. கோபுரமும் தானும் ஒன்றென்று அறிந்த பின் கோபுரத்தின் சுமை மறைந்தது.

உள்ளதெல்லாமோர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங்குலைவதுண்டோ!—மனமே
வெள்ளமெனப் பொழிதண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா?

என்பது பாரதியார் தெளிவு.

மனச்சுமையை தாங்கும் சுமைதாங்கி மனத்துள் இருக்க, அங்கு தேடாது ஊரெல்லாம் தேடித் திரிந் தாலும சுமையை நீக்கிக் கொள்ள வழி ஏற்படுமோ? மூட்டை தூக்கி முத்தையன் உள்ளிருக்க வெளியே மூட்டையை ஏற்றுக்கொள்வார் அகப்பட்டார். அகற்ற வும் ஏற்கவும் ஆற்றல் இல்லை.

''முன்செய்த பழிக்குத் துணை அவன் பன்னிரு தோள்கள்'' என்ற வாக்கியத்தை மறக்கலாகாது. முருகனுடன் ஒன்ருனல் முருகனே நம்மைத் தாங்கு வான், நம்முடன் நம் சுமைகளையும் தாங்கிடுவான். 'நாம், நமது' எனும் சுமையை அவனிடம் விட்டால், அதாவது அவன தோளில் ஏற்றி விட்டால் ஆனந்த மாய் உலாவலாம். விதியைக் காட்டி கதியாய் நின்ருன் முருகன்.

பாரதியார் ஆனந்தமாக எங்கும் திரியலுற்ருராம்!

''ஆன்ம வெளியில் மூழ்கித் திளைப்போர்க்கச்ச முண்டோடா மனமே! தேன்மடை இங்கு திறந்தது கண்டு தேக்கித் திரிவமடா!'' பாரதியாருடனும், மற்றைய தொண்டர் குழாத்துடனும் நன்று திரிவோம். திரிவோம், தேக்கித் திரிவோம், தேக்கியே திரிவோம், வாரீர்!

மனை

கண் போன்றது காக்ஷி. மனம் போன்றது மாக்ஷி. உளம்போன்றது உயர்வு. களம் போன்றது உலகம். பார்ப்பவர் யாவரும் உள்ள பொருளை ஒன்ருகப்பார்ப்ப தில்லை. பார்த்த ஒரே பொருளை பலவாகத்தான் காண் கின்றனர். பலவாகத்தான் வர்ணிக்கின்றனர். பொருள் ஒன்ருயினும் காக்ஷியின் அனுபூதி வெவ்வேருகத்தான் இருக்கின்றது. இதற்கு நல்ல உதாரணம் நமது வீடு —மனை என்பதுதான். மனையைப் பார்க்கிருர்கள். கட்டட அழகை போற்றுவார் சிலர். மற்றவை காண் கிலர்! மனையின் சூழ்நிலையை மதிப்பவர் சிலர். மனை யின் கிழவோன் கிழத்தி இவர்களின் பெருமையைப் புகழ்வார் சிலர். வீடும், வீட்டில் இருக்கும் மக்களை யும், வீட்டில் விளங்கும் வெளியையும், ஒளியையும் சூழ்நிலையையும் ஒன்ருய்க் கொண்டு விளங்குகின்றது. அநேக பொருள் நிலைகள் அடங்கிய இடம் மனையின் நிலை. பல தர்மங்கள் தங்கி வாழும் இடம். கல்வி பெருகும் இடம். அன்பு வளரும் இடம். கற்பு செழிக்கு மிடம். ஆண்டவன் தாண்டவம் ஆடும் இடம். அன்பின் வெள்ளம் அடங்கி தேக்கப்பட்ட இடம். இது அல்லவோ வீடு! குளிர்ந்த கண்ணுல் நல்ல மனத்தோடு, அன்பெடுத்த உள்ளத்தோடு உலகைப்பார்த்தால், உலகம் போர்க்களமாகாது; திணைக்களமாகவும் பேரின்ப வீடாகவுமன்ருே காணப்படும்! மனை யென்பது யாது என்று ஆராய்ந்து பார்த்தால் மிகவும் அற்புதம். மனை என்பது தங்கும் இடம். மனை ஒருவருக்குச் சொந்தம். அவர் மனையாளர், மனைக்கிழவன் என்று செந்தமிழ் பகர்ந்திடும். வீட்டுக்காரன் என்றும் சொல்லலாம்.

மனையை வைத்து சுத்தமாய் காப்பாற்றி, விட்டுக்காரனை அதிலே தங்கும்படி செய்பவள் ஒருத்தி. அவள்தான் மனைவி. அவளை ஜீவன் என்றும் சொல்வார்கள். மானிட தேகம் ஓர் மனை. அம்மனையை தம் மனையாய்க் கருதி வைத்து ஆள்பவள் ஒருத்தி. அவள் தான் மனம்-ஜீவன் எனும் விந்தைப் பெண். இம்மனைக்கு ஒரு கிழவன் உண்டு. அவன் வீட்டுக்காரன். அவன்தான் மனையில் புகுந்து வசிக்கும் ஈசன். ஆகவே சித்தர்கள் கண்ட காக்ஷியைப் பாருங்கள்! தேகமெனும் மனையில், மன முடன் கூடிய ஜீவன் என்ற கற்புப் பெண் மனைவியாய் வளந்தருள, ஈசனெனும் புருஷன் ஆட்கொண்டு, ஜீவனும் ஈசனும் இல்லறம் நடத்தி திளைக்கும் காட்சி யன்றோ இந்த ஜகத்.

இந்த ஜகமே ஒரு மனை. பிரக்ருதி எனும் மனை யில் சக்தியெனும் ஜகன்மாதா ஈசனைக் கலந்து, ஜீவ ராசிகளாம் உயிர்களையெலாம் பெற்றெடுத்து அவை களை ரக்ஷித்து காக்கின்ற ஜகத் குடும்பத்தின் விசேஷத் தையும், விந்தையையும் யார்தான் விவரிக்க வல்லார்!

மனை யென்றழைப்பதை மலையாளத்தில் கோவி லகம் என்பார்கள். காயத்தையும் கோவிலாகக் கொள்வார்கள் தொண்டர்கள். ஜீவன் மனைவியானல் ஈசனை மறவாத ஜீவன்கள் அல்லவோ கற்புடைய பெண்டிராவர்! ஈசனை மறந்தது ஈசனை இழந்தது அல்லவோ? மறந்த பொருள்கள் ஒருவனுக்கு இழந்த பொருள்களாகும். ஈசனை மறந்து, அக்காரணம் பற்றி புருஷனும் நாதனை இழந்தவர்கள் அல்லவா உலகத் தில் உண்மையில் வைதவ்யம் அடைந்தவர்கள்! உலகுக் கெலாம் ஒரே புருஷனாக விளங்கும் தெய்வத்தை மற வாதிருக்கும் மேன்மக்களுக்கு புருஷன் இறந்த அசுபநிலை எங்ஙனம் கிட்டும்? கிட்டாது, கிட்டாது!

உயிர்

உயிரை யாதென்று அறிந்தவர் இல்லையென்றே சொல்லி விடலாம். உயிர் இருக்கிறதென்பதும், இல்லை என்பதும் பெரும்பான்மையோருக்குத் தெரிந்ததுதான். உயிரின் ஓட்டத்தைப் பார்த்து சொல்லுகிறார்களேயன்றி வேறல்ல. இதயத் துடிப்பு நின்று விட்டது. தேகத்தில் சூடு இல்லை, செயல் இல்லை, மூச்சில்லை, உயிரில்லை என்கிறார்கள். எங்கும் உயிரோட்டத்திற்கு காரணமாய் நிற்கும் உயிர் ஒன்றுதான் அதைத்தான் பாரதியார்,

> உள்ள தெல்லாம் ஓருயிரென் று உணர்ந்தபின்
> உள்ளங் குலைவதுண்டோ-மனமே

என்றார்.

உயிரோட்டம் காணுமிடம் தேகம்-மனை. உயிரோட்டத்துக்கு ஆதிகாரணமாய் நிற்பது சக்தியும் சிவனும் கூடுதல். இந்த கூடல் க்ஷேத்திரத்தில்தான் வெளியே விட்ட மூச்சு உட்செல்லுவதும், உட்சென்ற மூச்சு வெளிவருவதும்; உடலும் உயிரும்போல் ஜீவனும் ஈசனும் உட்கலந்து நிற்குமிடம். இந்த கூடல் எனும் மனையில் வசிக்கிறான் ஜீவன்.

> கூடல் போலக் கொடியேன் அகமும்
> ஆடல் அரங்காய் அமர்ந்தானன்றே

என்கிறார் சேக்கிழார்.

இல்லறம்

கூடலெனும் இக்கோயிலில் - க்ஷேத்திரத்தில்-இல்லறம் நடத்துகிறார்கள். எப்படியோ? கொடுப்பதுதான் தர்மம், "ஈதலறம்" என்றார் ஔவை.

"ஈந்தவரன்றி இருந்தவர் யாரே" என்றார் கம்பர்.

வாழ்ந்தே இருப்பார். ஈந்தே வாழ்வார். மற்றவரோ இரந்தே மாய்வர். மக்கள் வேண்டி வேண்டி மாண்டுவிடுகின்றார்களே என்று வருந்துகிறார் சித்தர்.

"மாய்ந்தவரெல்லாம் மாய்ந்தவரல்லர்
ஏந்திய கரமொடு இரந்தவர் எந்தாய்!"

ஈயுமிடம், ஈசன் வாழுமிடம்; உயிர் தழைக்குமிடம்.

இந்த மனையின் வாசலை வர்ணிக்கின்றார் சிவவாக்கியர்,

இந்த வாசல் ஏழை வாசல், எம்பிரான்
இருக்கும் வாசல் யாவர்காண வல்லீரே

"தீவினை விட்டீட்டல் பொருள்"—இப்பொருள் கொண்டு வாழ்விக்கப்படுவது இல்லறம்.

வஞ்சகம், துரோகம், கொடுமை, துன்பம், இவையகற்றி நிகழ்த்தும் தொழில் வழியே கிடைக்கும் பொருள் கொண்டு வாழ்வு நடத்துகிறார்கள் மேன் மக்கள். இகபரத்தாசை யொழிந்த யோகியர்க்கு சிறிது ஈந்து, ஈட்டிய பொருளை நாடிய தீவினையகற்றி இல்லறம் நடத்துகிறார்களாம். உலகனைத்தும் ஒன்றுமே என்ற உணர்வும், எல்லாம் ஓர் உயிர் என்ற அறிவும் ஒன்று கலந்து அந்தக் காதலில் இருவர் கருத்து ஒருமித்து உயிர் வழியே ஆதரவு பெற்றது இன்பம். ஜீவனும், ஈசனும் ஒருவழிப்பட்டது சிவயோக இன்பம். இவ்வின்பமும், தாண்டியே நின்ற நிலை வீடேயாகும். இல்லத்தில் இலகுவது நல்லறம். பரனை நினைந்தே நடத்தும் இல்லம். நல்லறம் நழுவாது, மனை எனும இல்லறத்தில் முதிர்ந்து, தேகமெனும் இல்லறத்தில் தெளிந்து, ஜகத் எனும் இல்லறத்தில் திளைப்போர்க்கு எக்காலமும் இன்பமேயன்றி துன்பமேயில்லை.

தவமும் தொழிலும்

உண்மையான தொன்ற தொன்றை உற்றுநோக்கி யும்முளே
வண்மையான வாசியுண்டு வாழ்த்தி ஏத்த வல்லிரேல்
தண்மை பெற்றிருக்கலாம் தவமும் வந்து நேரிடும்
கன்மதன்மமாகும் ஈசர் காக்ஷிதானும் காணுமே.

இவ்வண்ணம் உபதேசித்தது சிவவாக்கியர். தவமடையும் வழி கூறுகின்றார். தவம் எங்கே அடையலாம்? தவம் செய்ய வேண்டுமெனக் கருதி நாட்டைத் துறந்து வனத்திற்குச் செல்கின்றனர். வனத்தில் விலங்குகளுடன் வசித்தால் தவம் கைகூடுமோ? கூடாது என்பர்.

மனத்தகத்தழுக்கறுத மௌன ஞானயோகிகள்
வனத்தகத்திருக்கினும் மனத்தகத்தழுக்கறுர்
மனத்தகத்தழுக் கறுத்த மௌன ஞானயோகிகள்
பினத்தடத் திருக்கினும் பிறப்பறுத்திருப்பரே

சிவவாக்கியர்.

மனதில் அழுக்கு சேர்வது எங்ஙனம்! 'நான்' என்னும் ஆணவமும், ஐம்பொறிகளின் ஆசைகளுமே மன அழுக்குக் காரணமாம். "மெய்வாய் விழி நாசியொடும் செவியாம் ஐவாய் வழி செல்வது அவா வினையே" என்பது அனுபூதி. இவையெல்லாம் வேற்றுமையால் நிறைந்த மண்ணுலகைச் சார்ந்து நிற்பவை. உலகப் பொருள்களின் ஆசையைத் துறந்து அவற்றின் மேல் செல்லும் குறியை உள்ளே செலுத்தி நோக்கி உள்ளுறையும் உண்மையாம் தேவனை நாடிய மனமே தவத்தை யடைந்ததாகும். தேடிப் பிடிப்பது தவமன்று. முருகன் பாதத்தை நாடி நிற்பதுவே தவம் உறும் வழி என்பர். நாடி நிற்கும் பொருள் ஒன்றென

நிலைத்து விட்டாலன்றி பேதத்திலேயே மனம் அலைந்து துன்பப்படும். அபேத, ஏக தத்வத்தை உணராமல் அயர்ந்திடும்.

"ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்று பட்டினத்தார் செய்த உபதேசத்தை கைக்கொண்டாலன்றி தவம் சித்திக்காது. ஒன்றென நிற்கும் பெரும் பொருளை உள்ளத்தில் வாழ்த்தி யேத்திஞல் கைகூடும் பொருள் தவம் என்று உபதேசித்தார் சித்தர். இந்த நிலையே மௌனமாகும். எத்தொழிலைச் செய்தாலும், ஏதவஸ்தை பட்டாலும் முக்தர் மனம் மோனத்தே தான் நிற்கும். 'காதி விளையாடி கைவீசி வந்தாலும் தாதி மனம் நீர்க் குடத்தேதான்!' பட்டினத்தார் செய்ததோர் அற்புத உபதேசம். ஆகவே தொழிலுக்கும் தவத்துக்கும் முரண் உண்டோ? இல்லை யெனலாம். மோனத்தை நாடி, கருத்தை முருகன் சீர்பாதத்தில் வைத்துவிட்டு, பற்பல காரியங்களை இயற்றிஞலும், தவத்திற்கு இடையூறு ஏற்படாது. செயலெலாம் அவன் செயலென்று கடமையை செய்பவர்கட்கு தவக் குறைவும் உண்டோ? தெய்வத்தை நினைந்து மறக்காமல் ஈசன் செயலெனவும், அவன் கட்டளை யெனவும் செய்யப்படும் செயல்களெல்லாம் தவமே யன்ருே? ஜீவன்கள் எல்லாம் சிவஸ்வரூபமாய் கருதும் ஞானிகளுக்கு தவம் என்றும், தொழில் என்றும் மாறுபாடும் உண்டோ? மனமகலாத, மாருத்தியானத்தில் நிலைத்தவராய் உலகெலாம் தானெனக்கருதி "நான்" எனும் மாயம் துறந்தவராய் விளங்கும் யோகிகட்கு எக்காலமும் தவமே.

ராமாயணத்தில் சூர்ப்பனகை அவமானப்பட்டு ராவணனிடம் போய் ராமனை நிந்தித்துப் பேசக் கருதி தன்னையறியாமல் ராமனை அலங்கரித்து பேசிவிட்டாள்! ராமன் யார் தெரியுமா!

வணங்கு தலை முனித்தலைவர் பாலுடையார்
வானத்து இந்துவின் முகத்தர் எரி நீரில்
நாளகந்த மலரை பொருவு கணர் சுலற்கையார்......
அந்த மில் தவத்தொழிலர் யாவரை யொப்பார்.

ராமபிரான் "அந்த மில் தவத்தொழிலர்" என்றாள்.

தவமே தன் தொழிலாம். முடிவற்ற தவமாம். இதுதான் யாதோ?

மாத்தான வத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கு ஒரு நிட்டையுண்டோ! நித்தன் அன்பு கொண்டு,
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தால் உலகத்தவரை போல இருப்பர் பற்றற்றவரே!
—பட்டினத்தார்.

எப்படித்தான் உபதேசித்து விட்டார்!

பற்றற்றார் ராமன். உலகையெலாம் அன்பால் பற்றி ரக்ஷிக்கும் கடவுளாம் ராமன் பற்றற்றிருந்தார். அரசும் வேண்டார். நாடும் நகரமும் வேண்டார். காடும் மலையும் வேண்டாதவையல்ல. எல்லா உயிர்களுக்கும் உரிமை வாய்ந்த ராமன் எங்கிருந்தால் என்ன! எத்தொழிலைச் செய்தால் என்ன! மோனத்தின் ஸ்வரூபமாய் விளங்குகிறார். தவரூபமேயன்றோ! தவத்தொழில் யாது? பூண்ட அன்பே! தொழில் செய்தாலும் தொழிலற்றிருக்கும் திறம் வேண்டும். எல்லாவற்றையும் உலகத்தில் வியாபாரமாக்கி விடுதல் கூடாது. தொழிலையும் வியாபாரமாக்கிவிடாது ஈசன் விதித்த பணியாய் நடத்தி தொழில்களைத் தவமாக்க வேணும் என்பர் பட்டினத்தார்.

சுரப்பற்று வல்வினை சுற்றமுமற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்று மங்கையர் கையிணைக் கற்றுக் கவலையற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற்று இருப்பதன்றோ பரமா! பரமானந்தமே!

என்பர்.

தவமும் தொழிலும் அந்த மற்றிருக்கும் செயலை ராமனிடம் வகுத்தார் கம்பர். தெய்வ தியானம் மறவாது, பேத உணர்ச்சியன்றி அன்பினால் எவ்வுயிரையும தம்முயிர்போல் கருதி நடத்தும் தொழில்களெல்லாம் தவமே! ஆகவேதான்,

> பேத கர்மத்தால் வரும் ப்ராரப்தம் நானுவாகும்
> ஆகையால் விவகாரங்கள் மாதவம் செயினும் செய்வர்
> அவரவர்க்கு ஆனவாம் வாணிபம் செயினும் செய்வர்
> பூதலம் புரப்பர், ஐயமிட்டு முண்பர்
> சாக்ஷி நடுவான ஜீவன் முக்தரே.

என ஜீவன் முக்தர்கள் வர்ணிக்கப்படுகிறார்கள்.



அறிதல் வேண்டும். காணுமல் கண்டால் ஜகம் ஆனந்த மாய் வாசிக்கும், ருசிக்கும். இவ்வாறே கூறினர் திருமூலர்.

முகத்தில் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்.

திருமயிலே தேவாரத்தில் திருஞான சம்பந்தர் பாடுவார்.

மட்டிட்ட புன்னேயம் கானன் மடமயிலே
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம மர்ந்தான்.

சிவனும், சக்தியும் கலந்தன்றே ஜகம் உண்டாயிற்று. சிவனேயும், சக்தியையும் பிரிக்க யாரால் முடியும். அது பிரியாத கலப்பன்றே! ஒட்டியது, ஒட்டியதுதான். இப்படி ஒட்டிட்ட ஒன்ருய் விளங்கும் தத்துவத்தில் விளங்குபவர் சிவபக்தர்கள்.

ஒட்டிட்ட பண்பு ருத்திரபல்கணத்தார்
அட்டிட்டர் காணுதே போதியோ பூம்பாவாய்!

எல்லாம் ஒன்று என்று ஒட்டியே வாழ்க்கையை நடத்த வேண்டுமாம். ஒட்டிய அன்பினில் நிலேத்தது ஜீவன் என்ற பண்பை அடைந்துவிட்டால் அங்கே வாழ்வே தவிர, பெரு வாழ்வே தவிர, சிறு வாழ்வும் துன்பமும் அணுகாது. எலும்பும் உயிர்த்துவிடும்! ஜீவிதத்தின் ரகசிய நுட்பத்தை யல்லவோ உபதேசித்து விட்டார். உலகம் ஒன்றெனக் கருதி அன்பில் வாழ்வோர் ஊனிழந்து எலும்பே போலாயினும் உயிர்த்தே நிற்பர். புத்துயிர் கணத்திற்கு கணம் தோன்றி வெள்ளமெடுக்கும் இத யத்தில் பிறப்பு இறப்பு தாண்டிய இடம். மார்க் கண்டனே நிலேநாட்டிய இடம். ஆகவே ஜீவராசி களுக்கு உபதேசம் ஒன்று உண்டு என்பர் போலும் ஸ்ரீ ஞானசம்பந்தர். உடலும் உடல் உயிரும் நிலேபெற வேண்டில், "ஒட்டு! வெட்டாதே! ஒட்டுவது ஞானம்! வெட்டுவது மாயை" என்று உணர்.

குங்குமம்

(மாதர் மாதப்பத்திரிகை)

1 வருட சந்தா	ரூ.	6/-
2 வருடங்களுக்கு	ரூ.	11/-
ஆயுட் சந்தா	ரூ.	100/-

'குங்குமம்' காரியாலயம்

'முரளி', பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு,

மதராஸ்-10